Registered No. M. 878.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞாநக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 2 { 1912௵ மார்ச்சு௴ 15௳ / விரோதகிருது௵ பைங்குனி௴ 3௳ } பகுதி 11.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமிஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2          தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| பிரஹ்மஞானசபை வெள்ளி யம்பலத்தின்ஞாநதூதாகும். ப. நா. | ௩௬௧ |
| ஸந்மார்க்கமுறையும் ஸம்ஸாரியும்—ப. நா. | ௩௬௮ |
| அயநம்—R. S. நாராயணசாமி ஐயர். | ௩௮௨ |
| புத்தகவரவு—பத்திராதிபர். | ௩௮௫ |
| சமாசாரம்—பத்திராதிபர் | ௯௪ |
| பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம். | |



**The Swadeshi Life Assurance Co., Ltd.,**
**BOMBAY.**

**ஹெட் ஆபீஸ் பம்பாய்.**

மூலதநம் ரூபாய்—பத்து லெக்ஷம்.

Honourable லல்லுபாய் ஸாமல்தாஸ் அவர்கள்—சேர்மென்.

மிஸ்டர் ஜியார்ஜ் கிங் துரை அவர்கள் F. F. A. F. I. A. (London) — ஆக்சுவரி

K. சுப்பிரமணிய அய்யரவர்கள் B. A., F. S. A. A. (London) J. P. ஹானரரி பிரவிடென்ஸி மாஜிஸ்டிரேட், F. M. U. F. B. U. பம்பாய் — மானேஜர்.

எம் கே. இராஜகோபாலாசாரியார் அவர்கள் F. T. S., பப்ளிக் அகவுண்டெண்டு and ஆடிடர் of "K. R. Chari Brothers" West Tower Street, Madura — சென்னை ராஜதானியின் சீப் ஏஜண்டு. Chief Agents

எல். புருஷோத்தமநாயுடுகாரு F. T. S. எடமணல், சியாழி தாலூகா ஏஜண்டு.

ஜில்லா, தாலூகா, டவுன் ஏஜண்டுகள் தேவை.

தாராளமான கமிஷன் கொடுக்கப்படும்.

வரலாற்று விளம்பரம் (Prospectus) முதலியவைகளுக்கு கே. ஆர். சாரி பிரதர்ஸ், மதுரை என்னும் விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

Please Compare our rates and conditions before insuring your life with any other company.

Apply for Agencies and other particulars to
Messrs. K. R. CHARI BROTHERS,
*West Tower Street, Madura.*

395

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 2 } 1912ஞ மார்ச்சுமீ 15உ
விரோதகிருதுஞ பைங்குனிமீ 3உ } பகுதி 11.

## * பிரஹ்மஞானசபை வெள்ளியம்பலத்தின் ஞானதூதாகும்.

என் சிநேகிதர்களே!

பதினைந்து தேசங்களினின்று அந்தந்த தேசங்களிலுள்ள பிரம்மஞ்ஞானக் கிளைச்சபைகளிலிருந்து அநேகர் இம்மஹாசபைக்குப் பிரதிநிதிகளாக வந்து கூடியிருக்கின்றார்கள். ஐரோப்பாக் கண்டமென்ன, அமெரிக்காக் கண்டமென்ன, ஆஸ்ட்ரேலியா நாடென்ன, நாலுதிக்குகளினின்றும் ஆண், பெண், சிறியார், பெரியார், ஒரே நோக்கமுள்ளவர்களாய், ஒரே விஷயத்தில் சிரத்தாபக்தி யுள்ளவர்களாய், உயர்நலமமைந்த ஒரே லக்ஷியம் கொண்டவர்களாய், என் முன் தோன்றுகின்ற இம்மஹாசபையில் கூடியிருக்கின்றனர். நம்முடைய எண்ணங்கள் பலவாறாய் வேறுபடும். நம்முடைய பாஷை

* குறிப்பு:—காசிக்ஷேத்திரத்தில் பிர்ம்மஞான சபையின் சென்றஞ டிசம்பர்மீ கடைசியில் கூடிய பெரிய கூட்டத்தில் வந்திருந்தவர்களில் பலர் பலபாஷையில் பிரஹ்மஞான சபையின் உயர்நலத்தைப்பற்றி உபந்யாஸம் செய்தார்கள். முடிவுரையாக மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் ஆங்கிலத்தில் செய்த உபந்யாஸத்தின் சுருக்கம் இது.

களும் வேறுபடும். பல மதஸம்பிரதாயங்களை அநுஷ்டானத்தில் உடையவர்களாகவிருப்போம் சமயமுறைகளிலும், ஜாதியிலும், வர்ணத்திலும், தேசங்களிலும் இச்சபையில் கூடியிருக்கின்ற நாம் வேற்றுமையை யுடையவர்களாக விருப்பினும், உயர்நலமமைந்த ஒரு லக்ஷியத்தில் ஒருமைப்பாடுள்ளவர்களாக விருக்கின்றோம். அதாவது, பொதுஜந கைங்கர்யம் செய்தல் மூலமாய் ஈசுவர கைங்கர்யம் செய்தல் என்பதும், உலகில்வாழும் ஜநங்கள் எல்லாம் சகோதரதர்மம் என்பதனுள் அடங்குகிறார்கள் என்ற நலமமைந்த மெய்யுணர்வைப் பரவச் செய்யும் முயற்சி என்பதுமாம். இந்தஇடத்தில் பலவர்ணம் பலஜாதி பேதங்களுள்ள ஆண்பாலர்களும் பெண்பாலர்களும எவ்விதத் துவேஷ புத்தியுமின்றி ஒரே மநத்தினராய், ஒரே கைங்கர்யத்தில் எண்ணமுள்ளவர்களாய், ஒரே லக்ஷியத்தால் தூண்டப்பட்டவர்களாய்க், கூடி இருக்கின்றமையை இவ்விடததில் தவிர வேறிடத்தில் நான் கண்டிலேன். ஒருவரோடொருவர் சிநேகபாவமும், சகோதரபாவமும் கொள்ளுகின்றவராய், வர்ணம், ஜாதி தேசம், பால் பேதமில்லாமல் மிகப் பிரியத்துடன் ஒருவரோடொருவர் ஸல்லாபம் செய்துகொண்டிருப்பதை நான் கண்ணுற்று மநங்களித்தேன். இனி வரப்போகும் காலத்தின் முற்குறியாக இது இருக்கிறதென்று நான் மதிக்கின்றேன். வேற்றுமைப்படுத்தும் சரீரங்களைக் கவனியாமல் எங்கும் பரவினதாயுள்ள ஆத்மா ஒன்றே யென்ற ஏகிபாவ உணர்வு இனிவருங்காலத்தில் நிகழும். இச்சபையில் பல பாஷையில் பல நண்பர்கள், அவரவர்கள் மநத்தின் கண் எழுந்த எண்ணங்களைப் பிரஸ்தாபித்தார்கள். ஆனால் அவர்கள் பிரஸ்தாபித்த எல்லா எண்ணங்களிலும் கருத்து ஒன்றே. பொதுஜந கைங்கர்ய முறையில் "நான் முந்துவேன், நான் முந்துவேன்" என்ற அவாவானது ஒவ்வொருவரையும் தூண்டியதாக நான் நினைக்கிறேன். இக்காலத்தில் பலதேசத்தார்கள் வியாபாரப் போட்டியால் ஒருவரை யொருவர் மேற்போக வேண்டுமென்று பேராசை கொண்டு, போராட்டம் செய்கின்றனர். இத்தன்மையான சுபாவம் நீங்கி மநச்சாந்தராய் அறிவு நிறைந்தவராய் ஜநகைங்கர்யத்தில் ஈடுபட்டவராய் ஆதல் எக்காலம்? அக்காலம் சீக்கிரமாய் வரவேண்டுமென்பது என் பிரார்த்தனை. ஆத்ம ஐக்யபத்யமுள்ள உணர்ச்சி

யுடையவராய் இனிவரப்போகின்ற மனிதவர்க்கம் அமையுமென்றும், அது உலகத்தில் சமாதானத்துடனே நடைபெற்று வாழுமென்றும், நாம் எல்லோரும் எதிர்பார்க்கின்றோமல்லவா? இப்போது உலகத்தில், ஜநக்கணக்கில், ஜநங்கள் விர்த்தியாகிறார்கள் என்றும், உலக நாகரீக முறைகளிலும், கல்வி அறிவிலும், ஞாநத்திலும், எங்கேபார்த்தாலும் ஜநங்கள் அபிவிர்த்தி யடைகின்றார்கள் என்றும் கண்கூடாப் பார்க்கின்றோம். பழமையான தப்பெண்ணங்கள் வரவரக் குறைகின்றன, மறைகின்றன. வீணான பழைய சமுசயங்கள் வரவரத் தொலைகின்றன. இனிவரும் நற்காலத்திற்குத் இது நலமான சூசனையாம். ஆயினும் முற்றும் நற்காலம் விடிந்துவிட்டதென்று நாம் நினைப்புக்கொள்ளா வண்ணம், ஹெலினம்பாள் அம்மையாரும், அன்னிபெஸண்டு அம்மையும் முழு மோசக்காரர்களெனச் சிற்சில சமயங்களில் பத்திரிகைவாயிலாகநமதுகண்ணுக்குத் தோன்றும். இவ்வபிப்பிராயம் அநேகமாய் ஜநங்கள் மறந்திருப்பார்களென்று நான் மதித்தேன். மறுபடியும் ஒருமுறை அதைப் படிக்க வியப்புக்கொண்டேன். ஆயினும் அத்தன்மையான பிரஸ்தாபம் துவேஷத்தினால் உண்டானதென நாம் நினைக்கவேண்டாம். அறிவின்மையே அதற்குக் காரணமாம். ஜநங்கள் பொதுவாய்த் தம்மைப்போல் பிறரை நினைக்கின்றார்களல்லவா? எக்காரியத்தைச் செய்திடினும் "தமக்கு" "தமக்கு" என்று ஒரு காரியத்தைச் செய்கின்றார்கள! தன்னுடைய அநுபவத்திலில்லாத ஒரு காரியத்தை ஒருவன் செய்திடில், அவனையும் அவனது காரியத்தையும் உலகத்தினர் பிசகாக நினைத்தல் ஸகஜந்தானே! சாதாரணமான உலகத்தாரின் அநுபவத்திற்குப் புறம்பான விஷயங்களைநாம் செய்தோமாகில்,நம்மைப் பித்தரென்றே அவர் மதிப்பாரன்றோ!நமது கருத்தையும், நோக்கத்தையும் சற்று ஆராய்வோம். பிறர் நலம்பெற நாம் தொழிற்பட முயலுகின்றோம். இஃது இக்காலத்தியர், தர்மமென்று கொள்ளும் சித்தாந்தத்திற்கும், விரோதமாயிருக்கின்றது. அதுவோ, வலியான் எளியானைத் தாக்கி அவன்பேரில் ஏறுதலாம்; நாமோ உலகத்தார் மதிக்கின்ற உலகநலங்களை விரும்புகின்றோம் அல்லோம். நம்மொழுக்கம் உலகவொழுக்கத்திற்கு முரணுகின்றதன்றோ? அதனால் பொதுஜன அபிப்பிராயத்தில் நாம் பித்தராகவாவது இருக்கவேண்

டும். அல்லது மோசக்காரராகவாவது இருக்கவேண்டும். இவ்விரண்டில் ஒன்றுதான் நம்முடைய தலைமையாகவேற்படும். உலகில் ஒவ்வொருவனும் யாதேனும் ஒரு சுயநலத்தால் தூண்டப்பட்டு ஒரு கர்மம் புரிகிறான்; தனக்கு நஷ்டத்தை உண்டுபண்ணிக்கொண்டாவது மாற்றானைச் சகோதரனென்று கருதி அவன் நலம்பெற வேண்டுமென ஒருவன் ஒரு கருமம் செய்தால், அவன் நடப்பை ஜனங்கள் அறியமாட்டார்கள்தானே. அஃது அவரது அநுபவத்தில் இல்லாமையால் என்றறிக. அவனை அறிவிலி என்றுதானே மதிப்பார்கள். பொதுஜந அநுபவத்திலில்லாத விஷயத்தை உலகம் வெறுத்தல் இயல்புதானே! இனிமேல் வரவர ஜநசமூகத்தில் உலகசம்பத்திலும் உலகச்செல்வாக்கிலும்ஒருவன்உயரவிரும்புதலைப் பார்க்கிலும், உலக கைங்கர்யம செய்தல் நலம் என்ற எண்ணம் பரவும், மேலும் பூர்விக சரித்திரத்தை ஆராய்வதில், வெற்றிபெற்ற அரசர்களுடைய பெயர் உலகில் நெடுநாள் நிற்காமல் மறைந்துபோகவும்,ஜந ஸமூகத்திற்குக் கைங்கர்யம் செய்த பெரியார்களின் பெயர் பிரகாசமாய் இன்றும் ஜ்வலித்துக்கொண்டிருக்கவும், பார்க்கிறோம். அதனால், அறிவின்மைபற்றி ஒழுகுகிறதாக நம்மை ஜநங்கள் மதித்தாலும், முற்காலத்திய பெரியாரை நினைக்க மனச் சோர்வு நீங்கி நாம் உத்ஸாகம் பெறுவோம். ஜயபேரிகை முழக்கின ஜார்க்ஸீஸ் என்ற பார்ஸீக தேச சக்கிரவர்த்தியின் பெயரை எவரேனும் இப்போது நினைப்புக்கொள்ளுகிறார்களா? இல்லை. தத்துவசாஸ்திரியாகவும், குருவாகவும் ஞாநியாகவும் விளங்கின பைதகோராஸ் என்பவரின் ஞாபகத்தை இன்னும் நினைப்புக் கொள்ளுகிறார்களன்றோ? உலகத்தில் நிரதிசய கம்பீரம்பெற்று உலகத்தியர் சிரத்தாபக்தியுடனே வணங்கப்பெறுகிறவர் யாவரென்று மதிக்கிறீர்கள்? ராஜ்யத்தை ஜெயித்தமன்னர்களல்லர். புத்தர் கிறிஸ்து இவர்கள் போன்றவர்களாவர். நித்ய வஸ்துவை யறியும் வழியைக்காட்டிய ஞாந குருக்களே உலகத்தாரால் மதிக்கப்படுகின்றார்கள், அன்பு பாராட்டப்படுகின்றார்கள், தனக்கு நல்வழி காட்டிய மஹா புருஷனையன்றோ ஒவ்வொரு மனிதனும் வணங்குவான், ஆராதிப்பான். ஜர்கஸீஸ் என்பார் ஜயித்த நாறு ராஜ்ஜியங்களை விரும்பிº ஒருவன் ஸ்ரீ கிருஷ்ணபகவான் திவ்விய வாக்கினால்

சொன்ன பகவத்கீதையை இழக்கச்சம்மதிப்பானே? பிரகிருதியின் உயர்நலம் நசுரமெனமதித்து புருஷனின் நித்தியமான உயர்வுறஉயர் நலத்தைக் கான ரூபமாக வசனிக்கின்ற ஞானிகள் தாம். ஞானபூமிக்கு அரசர்கள்! மனிதர்களின் ஹிருதயங்களை ஆளும் இறைவர்களாவர்! அத்தகையர்களான மஹா புருஷர்களைப்பண்புடனேயும், பணிவுடனேயும், நிதர்சனமான திருஷ்டாந்திகளாக நம்முன்னர் வைத்து அவர்களை வழிபட்டு அவர்கள் செய்துகாட்டிய ஒப்பில்லா உயர்நலமுள்ள உலக கைங்கர்யத்தை அற்பமேனும் நாமும் நம்முடைய சிற்றறிவுக்கும் திறனுக்கும் தக்கபடி செய்பத் துணிவோம். அப்படி செய்வதில் பிறர் அறிவிலிகள் என நம்மை ஏளனம் செய்தால், அப்போது, அம்மஹா புருஷர்கள் வகுத்துக்காட்டிய வழிபற்றி அன்றோ நாம்நடைபெறுகிறோம் எனத்தைர்யம்கொளல்வேண்டும்.

2. சென்றகாலத்திய விஷயத்தைவிட்டு, இனிவரப்போகும் காலத்தின் விஷயத்தைப்பற்றி யோஜிப்போம். நாம் இனிச் செய்யவேண்டிய தொழில் நம்முடையதே. இந்நகரைவிட்டுப் பிரிந்து இச்சகத்தில் நீங்கள் பெற்ற உயர்நலமுள்ள எண்ணங்களுடனேயும் உத்ஸாகத்துடனேயும் நீங்கள் அவர் அவர் இடம்போய்ச் சேர்வீர்கள். இவ்விடத்தில் நீங்கள் பெற்ற நலமுள்ள எண்ணத்தையும் உத்ஸாகத்தையும், நீங்கள் சந்திக்கு மவர்களுக்குக் கொடுமின். உலக கைங்கர்யமே நலமுள்ள முறைஎன நீங்கள்கொண்ட தீர்மானத்தைப் பிறருக்கு அறிவுறுத்துமின். இத்தன்மையான சபையில், நலமமைந்த உத்ஸாகமும், நற்கார்யம் செய்தலில் மன எழுச்சியும் ஒவ்வொருவருக்கும் உண்டாகி இருக்கும். அந்த உத்ஸாகத்தையும் மனவெழுச்சியையும், நழுவவிடாமல், நீங்கள் தொழிற்படும் களத்துக்குக் கொண்டுபோமுன் உங்கள் மனத்தில் எழுகின்ற நற்பாவங்கள் நற்கர்மங்களாகப் பரிணமிக்கும்படி செய்மின். வருகிற வருஷத்தில் ஆதியாற்றில் திரும்பக்கூடுவோம். அப்போது ஒவ்வொருவரும் தாம் செய்திருக்கும் நற்கார்யங்களை விஸ்தாரமாகப் பிரஸ்தாபிக்கும்படி அநேக நன்மைகளை நீங்கள் புரிந்துவருவீர்களென நம்புகிறேன். நம்முடைய பிரியமான பிரஹ்மஞான சபைக்கு இன்னும் அதிகமாக நன்றாய் உழைக்க, தீவிரமான உத்ஸாகத்தையும், மாசற்ற

மனத்தையும் உடையராகிச் சந்திப்பீர்களென நான் எதிர்பார்க்கிறேன்.

3. நம்முன்னர், நாம் செய்யவேண்டியதாகிய வேலை அதிகமாக இருக்கிறது. நம்முடைய சபையால் வெளிவந்த புத்தகங்களில், ஒரு மஹாபுருஷன் அவதாரம் சமீபத்தில் ஏற்படும் எனப்பிரஸ்தாபம் நிகழ்கின்றதை நீங்கள் அறிவீர்கள். அவரை, ஹிந்துக்கள், லோகதரு அதாவது ஞானபண்டிதரென்றும், பவுத்தர்கள், போதிஸத்வா அதாவது ஞானக்கருவூலமென்றும், கிறீஸ்துவர்கள், அவரை கிறீஸ்து அதாவது இறைவனின் ஞானதூதரென்றும் சொல்லுவார்கள். இந்த பிரஹ்மஞான சபையைச் சேரும் ஒவ்வொருவரும் பெறும் நலம் என்னவென்றால், அவர் அவருடைய சமயத்தின் உயர்வை இழக்காமல் புதிய ஞான தேஜஸைப் பெறுதலும், அப்படிப் பெறுதலினால், எல்லா மதங்களிலும் பல நாமங்களால் ஆராதிக்கப்பெறும் ஞானகுரு நாதன் ஒருவனே யென்றும் நிதர்சனமாகும். அதனால் ஒரு மதத்தினின்று வேறு மதத்திற்கு ஒருவன் மாற்றம்பெறவேண்டுவதில்லை. ஏனெனில் எல்லா மதங்களிலும் ஆராதிக்கப்பெறும் பரமபுருஷன் ஒருவனே! "ஒருவனே" தேவன். அவரை நோக்கியே எல்லா மதஸ்தர்களின் பிரார்த்தனைகளும் ஸ்துதிகளும் செல்லுகின்றன. அவரிடமிருந்தே, எல்லா அருட் பிரசாதங்களும் வருகின்றன "எந்த உருவத்தை யார் ஆராதித்தாலும், அதன் மூலமாய் என்னையே அவர் ஆராதிக்கின்றனர்" என ஸ்ரீ கிருஷ்ணபகவான் உபதேசித்துள்ள நலமுள்ள வாக்கியம் உங்கள் ஞாபகத்திற்கு வரும் "உலககுரு" என்பார் ஒருவரே! அவருக்கு எந்தப் பெயர் வைத்து வசனித்தால் என்ன? பரம புருஷனான ஈசுவரன் ஒருவனே. அவனுக்குப் பல குணங்களிருப்பினும், அவர் ஒருவரே யாவர். பலபெயர்களால் அழைக்கப்படுகிறார் அன்றோ? உண்மையில், "ஒருவனே தேவன். ஒருவனே பரமகுருவாம்". எல்லாச் சமயங்களும் அவரையே நோக்குகின்றன.

4. சமீபத்தில், இங்கிலாண்டில் யார்க்கு என்னும் பட்டணத்தின் கண்ணுள்ள கிறீஸ்து கோயிலில் கானன் ஆஸ்டின் என்னும் கிறிஸ்துபாதிரியார் செய்தஉபந்நியாசத்தில், திரும்பவும் அவதாரம்

சீக்கிரத்தில் ஏற்படும் என பிரஸ்தாபித்தார். கிறீஸ்துவர்கள், அம்மஹா புருஷனை "லோககுருவை" கிறீஸ்து என்றுதானே சொல்லுவார்கள். ஸ்ரீகிருஷ்ணன், போதிஸத்வா, கிறீஸ்து முதலிய பெயர்கள், ஒரே மஹா புருஷனைக் குறிக்கும் பல பெயர்கள். நம்மனிற்குரியர் ஒரே பிரபு ஆவார். கடவுள் ஒருவராயினும், அவருடைய எந்த மூர்த்தியைப் பிரியத்துடன் பக்தன் வழிபடுகிறானோ, அந்த மூர்த்தியே, சொர்க்கத்தில், இவன் முன்னர்த்தோன்றுவர். இவனை ஆதரிப்பர். இவனுக்கு வேண்டியவைகளை எல்லாம் அளிப்பர். "எவ்வெவர் எப்படி நினைந்தாலும், அவ்வவருக்கு அப்படி த்தோன்றுவர்", அவ்விதமே, மஹா குருவும் ஒருவரே ஆயினும், அவரை எம்மூர்த்தி ரூபமாக வணங்கி வழிபடுகிறோமோ அம்மூர்த்தி ரூபமாகவே வந்து நமக்கு ஞான உபதேசம் செய்வர். நம்மை நல்வழிப்படுத்துவர். வார்த்தை பேதமே அன்றி, வஸ்து பேதமில்லை. உலகத்தார்க்கு நமது பிரஹ்மஞானசபையானது வெள்ளியம்பலம் என்ற ஞானக்குருக்களின் சபையின் தூதாக ஏற்பட்டுள்ளது. அந்த வெள்ளியம்பலமே, இந்த சபைக்கு அதிஷ்டானம். அதைத்தான் நாம் வற்புறுத்திச் சொல்லுகின்றோம். லோககுரு அவதாரம் ஏற்படும் என்பது உண்மைஎன்று உறுதியாகச் சொல்லுகின்றோம். அவர் வரவை ஹிமாசலத்தை நோக்கிக் கண்களை நிமிர்ந்து பாருங்கள். அவர் வரவை எதிர்பாருங்கள். இந்நாட்டில் சமீபகாலத்தில் அவர் பாதங்களின்ஸ்பரிசம் ஏற்படும். அவர் ரிஷியாகத் தோன்றினும் தோன்றுவர். அவர் ராஜனாகத் தோன்றினும் தோன்றுவர். உயர் உத்தியோகத்தை வகிக்கினும் வகிப்பர். தாழ்ந்த உத்தியோகத்தை வகிக்கினும் வகிப்பர். வெளித் தோற்றத்தால் அவரைக் காண்பதரிது. ஆடையாலும், ஆபரணத்தாலும், அவரைக் காண்கிலம். அன்பார்ந்த ஹிருதயத்தால் அவரைக் காணலாம். அவ்விதம் அறிய ஆயத்தம் செய்து கொண்மின்.

---

ப. நா.

# ஸந்மார்க்க முறையும், ஸம்ஸாரியும்.

(304-ம் பக்கத் தொடர்ச்சி.)

7. அவன் ஞாநியாக ஆவது எவ்விதம்? அவன் ஆன்ம முறையாகிய சன்மார்க்கத்தில் ஒழுகுவது எவ்வண்ணம்? கருதும் லக்ஷியத்தை மாற்றவேண்டும். இந்த ஜன்மத்திலாவது, இனிவரும் ஜன்மத்திலாவது, தான் ஆர்ஜிக்கின்ற பொற்குவியலின் பிரயோஜனமின்மையை உணரவேண்டும்! பிறர் நலம்பெறச்செய்யும் கைங்கரியத்தின் உயர்வை அறியவேண்டும். ஈசுவர சங்கல்பம் நடைபெறும் முறையின் மகிமையின் ஒரு அம்சத்தையாவது கண் உள்நோக்கிப் பார்க்கவேண்டும். உலக ஜீவனமென்றால் தியாக மென்றுணரவேண்டும். தியாகத்தினாலன்றோ உலகங்களெல்லாம் இரக்ஷிக்கப்படுகின்றன. மனம் மொழிமெய்களை வசப்படுத்தி புத்தியின் உயர்நலத்தை பெற்றவனான அவன் ஞாநபூமியில் தீரனாவானன்றோ? தான் பெற்றிருக்கிற குணங்களை விடவேண்டுவதில்லை; ஆனால் இதுவரை சுயநலம் பாராட்டினான். அத்தன்மையை இப்போது விலக்கவேண்டும். பிறர் துயரத்தைக்கண்டு உபேக்ஷையாக விருந்தான். அம்மனோநிலையை இப்போது தவிர்க்கவேண்டும். ஆயிரக்கணக்கான ஜனங்கள் பசிப்பிணியால் வருந்தவும் அவர்கள் செல்வத்தைக்கைப்பற்ற இரக்கமின்றி இதுவரை ஒழுகலாயினன். தன் சகோதரனைக் கூட வருந்தச்செய்து இம்சித்து நடைபெறலாயினன். இத்தன்மையான மனோதர்மத்தை இனி தொலைக்கவேண்டும். இதுகாறும் சுயநலத்தையே லக்ஷியமாக முன் வைத்திருந்தான். இனிமேல் பிறருக்குக்கைங்கர்யம் செய்வதைத்தன் லக்ஷியமாகநினைக்கக்கடவன். பிறரை ஹிம்சித்து நசுக்குவதற்காக உபயோகித்துவந்த பலத்தைஇனித்தள்ளுண்டோரை விடுவிப்பதற்காக உபயோகிக்கக்கடவன். வணிகர் பூமியில் அவன் குபேரனாக இதுகாறுமிருந்தான். இனி ஞாநபூமியில் ஞாநதிரனாக ஆகுவான். இனி அவன் வாழ்நாள் முழுமையையும் ஜநசமூகத்துக்கு நலம்பயக்கும்படியாக அர்ப்பணம் செய்வான். அவன் சம்பத்தெல்லாம் பிறருக்கு உதவிபுரிய வகித்திருக்கிறான். வெளி ஒழுக்கமாத்திரம் வேறுபாடுஇன்றும் முன்போலவே ஆர்ஜிப்பன். ஆனால் பிறர்சேவைக்காக மனத்தின்கண்ணுள்ள லக்ஷியத்தை மாற்றவேண்டும். மனத்தின்கண் கருத்தை மாற்றவேண்டும். அவன்

ஒழுக்கம் வெளிப்படையாக எவ்விதமிருந்தாலும் மநம் இத்தன்மையாக விருத்தல்வேண்டும். ஒருவன் உலக வாழ்வில் அழுந்தினவனாக விருப்பதும், அல்லது ஆன்மா நோக்கமாய் ஸங்மார்க்கத்தில் நடைபெறுவதும் ஒருவன் மநோபாவத்தைப் பொறுத்தவென்றறிக.

8. கடமையென்ற வார்த்தையைப் பிரஸ்தாபித்தேன். ஞாந முறையில் எக்காரியத்தைச் செய்தாலும், கடமையால் தூண்டப்பட்டுச் செய்தலே முதற்படி. நீவிர் ஒவ்வொருவரும் உலகில் செய்யும் கர்மத்தை முதன்மையில் உலகஜீவநத்துக்கு அநுகூலமாயிருக்கிறதென்று நினைத்துச் செய்வீர்கள். அப்படிச் செய்தல் குற்றமன்று. மானபங்கத்திற்கு ஹேதுவானதுமன்று. ஆனால் அவ்விதம் செய்துவருவதில் சிறுகச்சிறுக நாம் அதைச் செய்கிறோம். அப்படிச் செய்தல் நம் கடமையென எண்ணங்கொண்டு செய்ய முயலுவீர்களாயின், அதுதான் சந்மார்க்கத்தில் முதற்படி. இதில் நீங்கள் லக்ஷியத்தை மாற்றுகின்றீர்களே யல்லாமல் கர்மத்தையும் தொழிலையும் விடுகிறீர்களில்லை. செய்யவேண்டிய கடமையை முடிக்கவேண்டும். உலகமென்ற சக்கரம் அதனால் நடைபெறுகிறது. ஜநங்கள் ஆண், பெண் யாவரும் வெவ்வேறான வியாபாரமுறை,தொழில்முறை,பற்றி நடைபெற்று ஜீவநம் செய்யவேண்டியவர்களாயிருக்கின்றார்கள். வியாதிஸ்தனுக்கு மருந்து முதலியன கொடுத்து உதவுதல் வேண்டும். அறிவில்லான் கல்வி பெறவேண்டும். வலியான், மெலியான், பணக்காரன், ஏழை இவர்களுக்குள் விவகாரங்கள் நேரிடின் நடுவுநிலைமை வழுவாது நியாயமுறை நடத்தப்பெறவேண்டும். இவ்விதம் உலகிலுள்ள ஆண் பெண் யாவரும் பெரிய வியாபாரியென்ன,சிறு வர்த்தகன் என்ன, வைத்தியன் என்ன, நியாயவாதி என்ன, உபாத்தியாயரென்ன,இவர்கள்போன்று தொழில் செய்யும் ஒவ்வொருவரும் தத்தம் தொழிலைக்கடமையாக மதித்து, உலகநிகழ்ச்சியை, ஈசுவரசங்கற்பம் நிறைவேறுதல் எனவெண்ணி அதில் தாமும் ஓர் கைங்கர்யத்தைச் செய்ய அமர்ந்திருக்கிறோமென்று நினைக்கற்பாலர். "நான் இந்த வேலையில் புகுந்திருக்கிறேன். அதைப் பூர்ணமாக நிறைவேற்ற வேண்டுவது என் கடமை. நான் கல்வி கற்பிக்கின்றேன். வியாதியை சுவஸ்தப்படுத்துகிறேன். வியவகாரம் செய்கிறேன். வியாபாரம்

செய்கிறேன். பலவாறான வர்த்தக சம்பந்தங்களை யேற்படுத்துகின்றேன். இப்படிச் செய்தல் அந்தந்தத் தொழிலால் ஏற்படும் பணத்துக்காவது, செல்வாக்கு கௌரவம் இவைகளுக்காகவாவது அல்ல, என் சொந்த லாபத்திற்கன்று. ஆனால் என்னைவிட உயர் நலமமைந்த இறைவனின் சங்கற்பமான உலக கைங்கர்யம் நேர்மையாகவும் சிறப்பாகவும் நடைபெறவேண்டும் என்பதை உத்தேசித்தும், அந்த ஈசுவர சங்கற்பநிகழ்ச்சியில் நானும் ஒரு சேவகனாகவிருந்து கைங்கர்யம் புரிவதற்கென்றும்," ஒருவன் எண்ணற்பாலன்.

9. இதுதான் முதற்படி. உங்களுக்குள் இதைச்செய்ய இயலாதார் ஒருவருமிலர். முன்போலவே உங்கள் கர்மத்தைச் செய்யலாம். அப்படிச் செய்வதில் நான் சொன்ன புதிதான பாவத்துடன் மாத்திரம் செய்தல்வேண்டும். கர்மம் ஒன்றே; அதைப்பற்றிய மனோபாவம் மட்டும் இப்போது வேறுபடுகிறது. வேலைக்காரன் யஜமானனை நோக்கி அவரது கட்டளையை நிறைவேற்றுமாறுபோல உலக சம்பந்தப்பட்ட கைங்கர்யத்தை நீவிர் நிறைவேற்றினவராவீர். அவனது யஜமானன் மேலுள்ள பக்தி சிரத்தைக்குத் தக்கவாறு யஜமானன் இட்ட கட்டளையை நிறைவேற்றுகிறான். இனி உங்கள் காரியத்தை நீங்கள் செய்கிறபோது இவ்விதமாக உயர்நலமமைந்த லக்ஷியத்தை வைத்துச் செய்வீர்கள். "உலக சம்ரக்ஷணைக்குரிய கைங்கர்யத்தின் ஒரு பகுதி என் கடமையாக ஏற்பட்டுள்ளது. அதை நான் செய்கின்றேன்." நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு காரியமும் கடவுளிடமிருந்தே நேராக வந்த ஆக்ஞைப்படி செய்வதாகவேற்படும். அவரது சங்கற்பம் உலகத்தை நடத்துகின்றது. உயர்ந்த தேவர்கள் ஈசுவர சங்கற்பத்தை நடத்துவதில் தாம் ஓரோர் பாகத்தைத் தலைமேற்கொண்டு செய்யக்கூடியது. அவ்விதமே நீங்களும் செய்தவர்களாவீர்கள். ஜியார்ஜ் ஹெர்பர்ட் (George Herbert) என்ற ஞானியார் சொல்லியிருக்கிறபடி, வீட்டின் அறையைப் பெருக்குகிறவனும், அத்தொழிலை ஈசுவர கைங்கர்யமென, நினைப்பானாகில், அத்தொழிலின் தன்மையை உயர்த்தினவனாவன். கைங்கர்யமாகவும், கடமையாகவும் செய்யப்படுகிற எல்லாம் ஸந்மார்க்கமுறை. தனக்கென் றில்லாமல் பொதுஜனங்களுக் கென்று செய்யும் கர்மமெல்லாம் ஸந்மார்க்கமுறை. ஆனால், இது இலகு

வான காரியமன்று. இதில் ஈசனை ஏமாற்ற முடியாது. நாம் இக்காரியத்தைச் செய்கிறோம். கடவுள் கண்டுகொண்டிருக்கிறாரா? அரைகுறையாய்ச் செய்தாலென்ன? என இவ்விதம் நினைத்தல் ஒண்ணாது. அவர் எல்லாவற்றையும் பார்க்கின்றார். அவர் பார்வை எங்குமுள்ளது, என்றுமுள்ளது; அதற்குத் தூக்கம் இன்று. வேலையை அவசரத்தில் அலங்கோலமாய்ச் செய்தல் ஒண்ணாது. தேவகைங்கர்யம் புரிகின்ற தொழிலாளிகள் அத்தன்மையாகச் செய்யார். அது அவ்வாறாயின், அறிவில்லாத மூடன் கார்யமாகும். தொழில் என்பது ஒரு கலை. கலை என்றால் நேர்மையாய்ச் செய்யும் வேலை. ஈசனுக்கு விசுவகர்மா என்ற பெயர் உண்டு. ஒவ்வொருவரும் அதனால் ஸகலகலாவல்லவராவர். அவ்விதமே அவர் கர்மம் செய்கின்றவருமாவர். யாதொரு குறைவுமின்றி நேர்மையாய்ச் செய்யக் கடவர். உலகில் சிறிதாயினும், பெரிதாயினும், ஈசுவர சிருஷ்டியில் அதனுடைய அமைப்பின் வனப்பு பூர்ணமாய் விளங்குவதைக்காணலாம். ஒரு பூதக்கண்ணாடியை வைத்துக்கொண்டு ஆராய்ச்சி, எவ்வளவுக்கெவ்வளவு நுண்ணியதாய் நடைபெறுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அற்புதமானவிதமாய்ப் பொருள்களின் நேர்மையான அமைப்பு நமக்குத் தோன்றுவதாகும். ஸ்தூலக் கண்ணுக்குப்புலப்படாதது பூதக்கண்ணாடியால் புலப்படும். நுண்ணியதான இரண்டு அணு அமைப்பென்ன, நுண்ணியதான, கிளிஞ்சிலில் செய்யப்பட்டிருக்கிற அற்புதமான சித்திரவேலையென்ன, ஜியாமதி என்ற கணித சாஸ்திரத்திற்கு ஒற்றுமையாய் அவ்வளவு பூர்ணமாய் இவைகள் அமைக்கப் பெற்றிருப்பதற்குக் காரணம் யாதோ? எவரை உத்தேசித்தோ? என்றால், மனிதனிடமும் கடவுளிடமுமுள்ள குணாதிசயங்களில், பூர்ணமாயிருத்தலின் உணர்வு என்பதொன்றுண்டு. அதன் திருப்திக்காகவென்று நீ மதி. ஒவ்வொருவனுடைய சிலமும் தகைமையும் அவன் செய்து முடிக்கும் கர்மபலனால் அல்லாமல், அக்கர்மத்தை வஞ்சனையின்றிச் செய்யும் விதத்தினால் மதிக்கத்தக்கது. செய்யும் கர்மத்தா வன்றி அக்கர்மம் செய்யப்படும் முறையால், செய்பவன் குணாதிசயம் விளங்கும். இத்தர்மத்தை உங்கள் கிருகத்திலும், தொழிற்சாலையிலும், உத்தியோக விடுதியிலும், கொண்டு செலுத்தும்போது அற்பமான

தாகத் தோன்றும். ஒவ்வொருவன் கர்மத்தையும் அக்கர்மத்தின் ஒவ்வொரு பாகத்தையும் தனிப்பட ஆராயும்போது அற்பமாகவே காணும். உலக முழுவதும் இத்தர்மம் நிகழ்கிறதென்று மதித்தால் இத்தர்மம் அற்பமாகத் தோனறுது. இப்போது தோன்றும் உலகம் வேறாகத் தோன்றுவதாம். அம்முகப்பார்வை எவ்வளவு வித்தியாசமாயிருக்குமென்று நினைக்கின்றேன். அப்போது உலகின் கண் நேர்மையும், அழகும் விளங்குமன்றோ? இத்தர்மம் உலகில் நடைபெறுமாகில், அலங்கோலமான பரபரப்பான தொழிலில்லை. பகட்டமான கார்யமில்லை. கடைகளில் சந்தேகப் படும்படியான சரக்குகளில்லை. ஒவ்வொரு வஸ்துவும், யாதொரு விதமான மோசமான வஸ்துவுடன் கலப்பில்லாமல் தன் தன் சுபாவத்திலிருக்கும். ஒவ்வொருபொருளும் உள்ளும் புறமும், ஒன்றோடொன்று முரணுமல் யதார்த்தமாயிருக்கும். ஒவ்வொரு பொருளின் வெளிமதிப்பும் உள்மதிப்பும், ஒன்றாயிருக்கும். ஒவ்வொரு கிருகமும் குறைவின்றி நிறைவாக அமைக்கப்பெற்றிருக்கும். ரஸ்தாவின் பக்கப் பள்ளங்களான கழிவு வாய்க்கால்கள் நேர்மையாகக் கட்டப்பட்டிருக்கும். ஒவ்வொன்றும் மனிதன் சக்திக்கும் யுக்திக்கும் ஏற்ப நன்றாய் அமைக்கப்பட்டிருக்கும். பார்த்தவிடமெல்லாம் குறைவில்லா நிறைவைக் காண்போம். இத்தன்மையானஉலகத்தை நான் விவரிப்பது ஒரு கட்டுக்கதைபோல் இப்போதுதோன்றும். அதை முடியாத கார்யமாக நினைப்போம். உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் அவனவன் சக்திக்கும் சாமர்த்தியத்திற்கும் தக்கபடி யதார்த்தமாகத் தொழிலைக் கடமையாகச் செய்வானுயின், மேல் வர்ணித்தபடி உலகம் அமைவது இலகுவான காரியந்தான். மறுபடியும் நான் வற்புறுத்திச் சொல்லுகின்றேன். ஆன்ம லாபத்திற்குரிய சன்மார்க்கமுறையில் கடமை என்பது முதற்படியாக அமைகிறது. இது உங்களுடைய ஆற்றலுக்குப் புறம்பானதன்று. உங்கள் ஒவ்வொருவருக்கும் சமீபத்திலுள்ளது. ‘இலகுவான காரியம் இது.

10. இதைவிட உயர்வானபடி சன்மார்க்கமுறையில் வேறொன்றுண்டு. உலகில் இறைவனுடன் கூட்டுறவாய்த் தொழில்புரியுமவர்களில் ஒருவராக உங்களை மதித்தலும், கம்பீரமான இவ்வண்டபிண்டசராசரங்களில் நடைபெற்றுவரும் ஈசுவரசங்கற்ப கைங்கர்யமுறையில்

உங்களுடைய கர்மமும் ஒரு பகுதியாயமையும்படியாய்ச்செய்தலும் அவ்விதம் நினைத்தலும் ஒருபெரிய காரியந்தான். அமெரிக்காதேசத்திலிருந்த எமர்ஸன் (Emerson) என்ற ஞாநியார் உபதேசித்தபடி "ரஸ்தாவின் அருகாமையில் நீ காணும் அற்பமான ஒரு தூணை இலக்ஷியமாக வைத்து நீ தொழில் புரிவதைவிடப் பரந்த ஆகாசத்திலுள்ள ஒருநக்ஷத்திரத்தை இலக்ஷியமாக வைத்து அதை நோக்கி உன் ரதத்தைச் செலுத்து. அதை முன்வைத்து உன் தொழிலைச் செய். இதுவும் உன் திறமைக்கு இலகுவானதாகும்." இதுவும் நீ செய்யக்கூடிய காரியத்தில் உயர்ந்ததாக முடியாது. உன் கடமையென்று சொன்னேன். அதைவிட மேலான தர்மம் ஒன்றுண்டு. அது உயர்நலமுள்ளது. நீ செய்யும் எல்லாவற்றையும் தியாகமாகச் செய்தலே அதுவாம். அதுவே இரண்டாம்படி. அப்படி என்றுலென்ன? அதனுலென்ன ஏற்படும்? தியாகமின்றேல் உலகமேது? நீ, நான் என்ற வேற்றுமை ஏது? உலக சிருஷ்டி தியாகத்தினுலன்றே வமைந்தது. * ஈசுவரன் ஒருசங்கற்பத்தால் பிரகிருதியை அங்கியாகச் செய்துகொண்டு அவ்வங்கியான பிரகிருதிக்குள் தன்னை யடங்கப்பெற்று அதனுள் நுழைந்து நீ, நான் என்று யாவரும் பிரக்ஞையையுடையவர்களாக அமையும்படி ஏற்படுத்துகிறுர். கிறிஸ்து மதத்தின் ஒரு உயர்ந்த உபதேசவசநமிதுவாம். ஒரு அஜம் கோல்லப்பட்டது எப்போது? கால்வேரி யென்னுமிடத்திலா? உத்தரம்: அன்று. அஃது உலகம் தோன்றிய நாள் முதல். தியாகத்தின் உயர்ந்த அர்த்தம் இதுவாம். ஈசுவரன் தன்னையே யக்ஞரூபமான தியாகம்செய்யாவிடில், பிரபஞ்சமில்லை. ஈசுவரன் தன்னை வரம்பிற்குட்படுத்திக்கொள்ளாமற்போனுல் புவநங்களில்லை. எல்லாம் யக்ஞ ரூபமான தியாகமே. பிறர் பிரக்ஞாநம்பெற்று நான்

---

* ஸஹஸ்ரம் ப்ரஜாபெயெதி
ஸதவொதவ்யுத।ஸதவஷ்வு꞉
ஜஷ்ரீஸவஸ்லேஸ்ரஜத।
யஜிஷம்கிம்வ।தஸ்ருஷ்டா।தஜெவாநவ்ரா
விஶ்வ।தஷ.நவ்ரவிஶ்ர॥ என்ற
தைத்திரீய உபநிஷத் வசநமும்புருஷசூக்தமும்இதைத்தெளிவிக்கும்.

என்ற உணர்வடைந்து கடைமுறையில், "பிரஹ்மைவாஹமஸ்மி" என்ற உயர்ந்த பூர்ண அறிவைப் பெற்று ஆநந்தம் பெறுதலுக்காகக் கருணையால் ஈசுவரன் தம்மை யக்ஞமானதியாகம் செய்து கொண்டார். உலகம் தியாகத்தை அதிஷ்டாநமாக உடையது. உலகில் உண்மையானஜீவிதம் தியாகம்பற்றி நிகழ்கிறது. ஒவ்வொரு கர்மத்தையும் தியாகமாக ஈசுவரார்ப்பணமாக ஒருவன் செய்வானாகில், அவன் பூர்ணம் பெற்ற ஞானியாவான். இது கஷ்டமானபடி. முதற்படி அவ்வளவு கஷ்டமில்லை. பிறர்க்கு ஏராளமாய்க் கொடுக்கலாம். நம்முடைய வாழ்நாளைப் பிறர்க்கு அநுகூலமாயிருக்கும்படி செய்துகொள்ளலாம். ஆனால் நம்மையே நம்முடைய கைங்கர்யத்தின் தியாகமாக அர்ப்பணம்பண்ணுதலும், நாம் செய்தகைங்கர்யத்தையேசின்னாபின்னப்படுத்தலும், அவ்வழிவுபெற்ற சின்னங்களை மனம் னோகாமலும் மனம் சலிக்காமலும்பார்த்தலும், இலகுவான காரியமன்று. அதுதான் தியாகம் என்பதின்பொருள். மறுபடியும் சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு நற்காரியத்தின் மேல் உங்கள் ஆயுள்நாளைச் செலுத்துவீர். உங்கள் காரியம் சித்தியாகும்படி உங்கள் சக்தியெல்லாம் புகட்டுவீர். அக்கர்மம் நிறைவேறுவதில் பிரயாசைப்படுவீர். அதற்காகப் பலதொழில் புரிவீர், தாயார் தன் கருப்பையிலிருந்து வெளிவந்த குழந்தையை எவ்விதம் அன்பு ஆதரவுடன் போஷிப்பாளோ, அவ்விதமே நீவிர் ஆரம்பித்த கர்மத்தைப் போஷிப்பீர். அக்கர்மம் அந்தோ! உம் முன்னில் சின்னாபின்னப்பட்டுச் சிதறுண்டுவிழும். அக்கருமம் தவறும். நினைத்த பலன் சித்தியாகாமல் போம். அது முடியும், அது அழியும். அது ஜீவிக்காமல் தொலையும். இத்தன்மையான கதி உம்முடைய கர்மத்திற்கு ஏற்படுமாகில் பொறுமையுடன் நீவிர்சகிப்பீரா? எத்தனை வருஷகாலங்களின் கர்மம் இது! எத்தனை வருஷகாலங்களின் நினைப்பு இது! எத்தனை வருஷகாலங்களின் தியாகத்தின் பயனிது. உம் முன் தூளியாய்ப் போவதுமிது. சூன்யதசையை யடைந்ததுமிது. இவ்வித சம்பவத்தை நீவிர் சகிப்பீரா? பொறுமையுடன் நீவிர் பார்ப்பீரா? இதைக்கண்டு நீவிர் சாந்தமாயிருப்பீரா? இன்றேல் சுயநயவிருப்பத்துடன் நீவிர் கர்மங்களைச் செய்ததாக மதியுங்கள். ஈசுவரசங்கற்பத்தை நிறைவேற்றச்செய்த கைங்கர்யமாக நீங்கள் செய்ய

வில்லையென்று நினையுங்கள். நீங்கள் செய்யும் கர்மம் எவ்வளவு உயர்வான ஜீவகாருண்ணியத்தைப் பற்றியதாயிருப்பினும், உங்கள் கர்மம் அது கடவுளின்கர்மமன்று. அதனால் உங்கள் கர்மம் சிதறுண்டு போகுங்காலத்தில் நீங்கள் வருந்துகிறீர்கள். துக்கிக்கிறீர்கள். அதைச் சகிக்கிறீர்களில்லை. அது அவருடையதாயிருக்கும் பக்ஷத்திலும், அது உங்களுடையதாகவில்லாதிருக்கும் பக்ஷத்திலும், அது உங்கள் உடைமையாகவில்லாமல் தியாகமாக அமைந்திருக்கும்பக்ஷத்திலும், அதன் நலமெல்லாம் தவறாமல் உலகம்க்ஷேமம்பெறவேண்டுமென்றேற்பட்டுள்ள நன்மையென்ற களஞ்சியத்தில் போயமையும். நீங்கள் குறித்தமுறை அவருக்கு வேண்டாமையாயின் அம்முறை சிதறுவதில் நீங்கள்வியஸனிக்கமாட்டீர்கள். நீங்கள்குறித்தமுறையோ ஒரு ஸ்வரூபந்தானே. அது உடைந்தால் அதை உயிர்ப்பித்த சகதி ஈசுவரனின் அகன்ற சங்கற்பமுறையில் வேறொரு உருவத்தைப்பெற இயலுமென மதித்து நீங்கள் பொறுமை கொள்ளுவீர்கள், அப்போதுதான் ஈசுவர சங்கற்பம் பெருகி மலர்ந்துவரும் உலகவிகாசமுறையென்ற விவஸ்தையில் நீங்களும் ஒரு கைங்கர்யம் செய்கிறவர்களாக ஆவீர்கள்.

11. மேற்கண்ட விஷயத்தைத் தெளிவாய் வேறொரு மாதிரியாய் உபமான ரூபமாய்த் தெளிவு படுத்துவேன், கவனியுங்கள். ஒரு பெரிய ஸைந்யத்தை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். அதைவிடப் பலமான ஒரு பகைவன் எதிர்க்கப் போகிறானென்று அச்ஸைந்யம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அச்ஸைந்யத் தலைவன் சண்டை நடத்தும் முறையை முன்னால் விவஸ்தைப்படுத்துகிறான், பிளான்(plan) போடுகிறான். ஸைந்யத்தின் ஒருஅணிவகுப்பை ஓரிடத்திலும், மற்றொன்றை வேறிடத்திலும், அமைக்கிறான். எல்லாவற்றையும் ஒரேஉத்தேசத்தைநிறைவேற்றும் பொருட்டுநேர்மைப்படுத்தியிருக்கிறான். போர்புரியும்நாள் உதயமாகிறது. அத்தலைவன் ஒரு தூதையனுப்பி யுத்தகளத்திலுள்ள ஒரு போர்வீரனுக்கு இவ்விதம் உத்தரவு செய்கிறான். "உன் முன்னிருக்கின்ற கோட்டையை எதிர்த்து முற்றுகை போடு. அதைக் கைவசப்படுத்து. அதை விடு என்று சொல்லுகிறவரையில் சுவாதீநத்தில் வைத்துக் கொள்வாய்." இதைக் கேட்ட யுத்தவீரன் தன்னிடமுள்ள ஆட்களைக்

கொண்டு அந்தக் கோட்டையை முற்றுகைபோடுவதும் பிடிப்பதும் இயலாதென் றறிகிறான். தோல்வி நிச்சயமாக நேருமென்று உணருகிறான். தானும் தன்னுடனுள்ள ஆட்க ளெல்லாம் மடிவார்க ளென்று நன்குணரகிறான். தலைவன் உத்தரவைப்பூர்த்தியாய் நிறை வேற்றினால் தன் வகுப்பிலுள்ள ஒருவனும் மறுநாள் சூர்ய உதய த்தைப் பாரான் எனத் தெரிகிறான். வரப்போகின்றதெல்லாம் இவ் விதமென்று, மலைமேலிருக்கும் பலமான அக்கோட்டையைக் காண் கையில் ஒரு பார்வையில் அவன் தெரிந்து கொள்ளுகிறான். ஆயினும் தலைவன் உத்தரவை மீறி நடப்பானா? அதை நிறைவேற்றுவதில் தயங்குவானா? அன்று அப்படி மீறி நடவான். அப்படிச் செய்தா னாகில் துரோகம் செய்தவனாவான், கௌரவ பங்கப்படுவான். இள நெஞ்சன், கோழை மநத்தன், என்ற நிந்தை மொழிகளுக் குள்ளா வான். அதனால், அவனுடைய ஆட்களை ஒருங்கு சேர்க்கிறான். "கோட்டையைப் பிடிக்கும்படியான உத்தரவுகள்" வந்திருக்கின் றனவென்று தெரிவிக்கிறான். அவர்கள் கோட்டையைத் தாக்குகி றார்கள், முற்றுகை போடுகிறார்கள். முதலில் 100க்கு 10 பேர் எதிரியின் குண்டால் மடிகிறார்கள். மீதமிருப்பவர்கள் மறுபடியும் தாக்குகிறார்கள், அநேகர் குண்டால்மடிகிறார்கள். மிகுதியுள்ளவர்கள் மறுபடியும் தாக்குகிறார்கள். கடைசியாய் ஒரு மனிதன் கூட இல் லாமல் எல்லாரும் மடிகிறார்கள். இதன்மத்தியில், யுத்தகளத்தின் மற்றோரிடத்தில் சேனைத்தலைவனால் ஏற்படுத்தப்பட்ட பிளான்படி எல்லாம் அநுகூலமாக நடந்துவருகிறது. பகைவர்கள் கோட்டை யை முற்றுகை போட்டுக்கொண்டிருந்த சிறு சைந்யத்துடன் போராடிக்கொண்டு அதிலேயே தங்கள் காலத்தையும், முயற்சியை யும், தங்களுடைய சக்தியையும் வீணாய்க் கழித்தார்கள். அஸ்த மநமாகு முன்னர் ஜயம் தலைவன் புறமாய் ஏற்பட்டது. சேனைத் தலைவன் ஜயபேரிகை முழங்க உத்தரவுசெய்தான். ஆனால் சைந்யத் தின் ஒரு வகுப்பினர் கோட்டையிருக்கின்ற மலைச்சாரிலில் செத்தும் செத்துக்கொண்டு மிருந்தார்கள். இப்போது, முற்றுகை செய்த சைந்யவகுப்பு மாண்டு போனதால், உண்மையில் தோல்வியாக ஏற்பட்டது? அவர்கள் செய்தகாரியம் வீணா? இல்லை! அவ்விதம் சொல்லவொண்ணாது. இச்சண்டையின் சரிதம் எழுதப்படுங்கால்

அந்த சைந்யத்தையுடைய தேசத்தார் தங்கள் நன்றியைக் காட்டும் பொருட்டு அச்சண்டையில் இறந்துபோன யுத்தவீரர்களைப்பற்றிக் கல்வெட்டுக்களில் தங்கரேக்கு அமைந்த அக்ஷரங்களால் அவர்கள் பெயரை வரைவார்கள்.

11. இப்போது என் உவம தரிசநத்தின் உண்மையைக் கவனியுங்கள். சேனைத்தலைவன் உலக சிருஷ்டி கர்த்தராகிய கடவுளே இருக்கும்போது அபஜயமேது? முயற்சி, பலனில்லாமல் போவதெங்ஙனம்? எல்லாத் தொழிலும் கைவல்யம் பெற்றே திரும் ஈசுவர சங்கற்பம் பூர்த்தியாக நடைபெறத் தன்னையே தியாகம்பண்ணிக்கொள்ளுதலில் கௌரவமென்று ஒருவன் வாரானே? எப்போதும் அபஜய மில்லை. ஈசுவரன் பக்ஷம் எப்போதும் ஜபமுள்ளதெனக் கருதற்பாலதன்றோ? நான், நீ என்றவர்கள் அபஜயப்பட்டதுபோலத் தோன்றலாம். நாம் நினைத்த சங்கற்பங்களும் விவஸ்தைகளும் பிரதிகூலமாய்ப் போனாலென்ன? நாம் செய்த ஏற்பாடுகள் அவலமாய்ப்போனாலென்ன? நம்முழு உயிரையும் அம்முயற்சியில் அர்ப்பணம் செய்திருக்கிறோம். பூர்ண சிரத்தையுடன் நமது வேலையைச் செய்தோம். பூர்ண பலத்துடன் நம் காரியத்தைச் செய்தோம். பெரிதாயிருக்கும் ஈசுவர சங்கற்பம் நிறைவேறுவதற்கு நம்மையே தியாகம் பண்ணினோம். இத்தகைய செயல்கள் வீணோ? இறைவனுடன் கூட்டுறவாய்த் தொழில் புரியும் தியாகிகளாக நம்முடைய பெயர்கள் வெளிவரும். நாம் தோல்வியடைந்தாலும், அதனால் பிரபஞ்சத்தில் நலம் ஏற்படுமாகில் அதைவிட உயர்ந்த கௌரவமும் பிரக்யாதியும் வேறு யாதுளது? ஆனால் சொல்லலாம். "தீரர்கள்தாம் இத்தகைய கார்யம் செய்யற்பாலர். இத்தகைய செயலும், அச்செயலா லேற்படும் சந்தோஷமும் அவர்களுக்கே உரித்தானவை." ஆம் அது சரிதான். சாதாரண மனிதர்கள் இத்தகைய செயல்புரியத் திறலுடையாரல்லர். ஆயினும் இத்தன்மையான செயலின் மகிமையையும், வனப்பையும் நினைப்பதால், நாம் ஒவ்வொருவரும் நம்முயிர் வாழ்வைச் சொற்பமேனும் நலப்படுத்தவும், மேன்மைப்படுத்தவும் இடமுண்டன்றோ? உயர்நலமுள்ள ஒரு வஸ்துவைப் பார்த்தால் நம உள்ளத்தில் அவ்வுயர் நிலைத்தை யமையும்படி செய்ய முயலுகிறோமன்றோ? உயர்நலம்

மைந்தலக்ஷியத்தின் மகிமையை அறிதலும் சிந்தித்தலும், அந்தலக்ஷியித்த சுவரூபமாக நம்மையமைத்துக்கொள்ளும்முறையில் முதற்படியாகவேற்படும்.

13. மேற்கண்டபடி, ஒருவாறு நான் விவரித்திருக்கிறமுறைகளின்படி நம் உலக வாழ்வை நேர்மைப்படுத்தக்கூடுமென நினைப்போமாகின், இவ்வுலகில் நாம் ஜீவிக்குங்காலத்திலேயேஞாநிகளாகவே ஆவோம். உலகத்தை அந்த லக்ஷியத்தை யநுசரித்து நடைபெறும்படிசெய்தலும் இயலும். ஈசுவர சங்கற்பத்தை மேன்மேலும் அநுஷ்டாந முறையில் கொண்டுவரும்படி செய்தவர்களாக ஆவோம. இதுதான் நான் பிரஸ்தாபிக்கத்துணிந்த சன்மார்க்கமுறையின் அந்தரங்கமான கருத்து. அதாவது உலகத்திலிருக்கின்றபோதே சம்சாரியான லௌகிகன் ஞாநியாகவேற்படக்கூடியது. உலகத்திலிருந்து லௌகிக கர்மங்களைச் செய்கின்ற காலத்திலேயே சன்மார்க்க முறையைப்பற்றி ஒழுகற்பாலர். பல ஜன்மங்கள் மனிதன் எடுக்கிருன் என்ற கொள்கைகொண்டவர்களின் சித்தாந்தப்படி, உலகத்திற்கே ரக்ஷகனுகவும் லோக குருவாகவும் அமையவேண்டிய ஒரு புண்ணியபுருஷன் அவனுடைய கடைசி ஜன்மம் "கானகத்திலேகிக் காலங்கழிப்பதன்று" என்பதாம். அநேக ஜன்மங்களில் ஒரு ஜன்மத்தில் ஒருவன் காட்டிற்குச் சென்று தவம்புரிந்து ஞாநவிஷயமறிந்துகொள்வான். சக்தியையும் சித்தியையும் உலகில் பின் உபயோகப்படுமாறு காட்டில் தபசினுல் பெறுவான். ஆயினும் உலகாரக்ஷகராக ஏற்படவேண்டிய புண்ணிய புருஷர்கள் உலகில் அவதரிக்குங்காலத்தில், அவர் அந்தஜன்மத்தில் காட்டுக்குப் போய்க் காலங்கழியார்; ஜனங்களுள்ள நாடு நகரங்களில் அவர் இருந்து காலங்கழிப்பார். சிலசமயங்களில் காட்டுக்குச்சென்று ஏகாந்தங்கொள்ளுவதினுலும் ஞாநமுறையில் பிரயோஜநம் பெறுவோ மாயினும், நடமாடும் கோயில்களாகிய புண்ணிய புருஷர்கள் ஜனக்கூட்டங்களிலேயே நடமாடுவர். அங்கே தான் அவர்களுக்குச் செய்யவேண்டிய வேலை உளது; அங்கேதான் உலகத்தின் ஆசாபாசங்களின் இழுப்பும் சோதனைகளும் அவைகளை ஜயிக்கும் சாமர்த்தியமும் வெளிவரக்கூடியன. இவ்வண்ணம் நமது சக்திகளெல்லாம் மலர்ந்து நாமெல்லோரும் பூர்ணர்களாக (christ) மலரும்பக்ஷத்தில், ஆ! அப்போது

உலகத்தின் வெளிப்படையான உயிர் வாழ்வை விட்டு உலகத்தை நடத்தும் ஈசுவர சக்தியின் ஓரம்சமாக அந்தர்முகப்பட இயலும். அப்போதுதான் உலகத்தோற்றத்திலிருந்து மறைவோமாவோம். ஆனால் அப்பூர்ண நிலையையடையும் முயற்சியில் உலகவிகாசமுறையின் தர்மத்தை யநுசரித்தே நாம் மேன்மேலும் விருத்தியடைய வேண்டும். பூர்ணம் பெறும்வரையில் அதுதான் கதி. பூர்ணம்பெற்ற மேல் உலகத்தோற்ற மென்ற திரைக்குப் புறம்பாகப்போகலாம். அந்தர்கதமாகலாம். அந்நிலையினின்று உலக நிகழ்ச்சிக்குரிய சக்திகளென்ற அருள் வெள்ளத்தைச் செலுத்தலாம்.

13. அதனால் நாம் ஒவ்வொருவரும் இச்சந்மார்க்க முறையை அநுஷ்டிக்கலாம் என்றும், அப்படி அநுஷ்டாநம் பண்ணினோமாகில் உலகம் அதிகநலம் பெறும் என்றும், அப்படி அநுஷ்டாநம் பண்ணுங்காலத்தில் நாம் த்வரிதமாய்நம்மிடம்அந்தர்கதமாயுள்ள சக்திகளை மலரும்படி செய்விக்கலாமென்றும் மதிக்கிறேன். நாம் ஒவ்வொருவரும் சரியாகச்சிந்தித்துநடைபெறுவோமாகில், நம்மிடம்குப்தமாயுள்ள ஈசுவராம்சம் பூர்ணமாகும்படியாகத்தான் நாம் தொழில் புரிபவராயிருக்கிறோம். ஒவ்வொருவரிடத்திலும் இறைவன் தங்கியுள்ளானன்றோ? அப்படியின்றேல் அவரை வெளிவரும்படியாகச் செய்தலெங்ஙனம்? வெளிப்படையாக வருவதற்கு முன் உயர்ந்த லக்ஷியம் இருத்தல்வேண்டும். அந்த லக்ஷியத்தை நோக்கிய சங்கற்பம் அதைப்போன்ற உருவத்தை நிர்மிக்கும். உங்கள் ஒவ்வொருவரிடமும், ஈசுவர பிரதிமை அமைந்து உறங்கி உள்ளது. அதை வியக்தப்படும்படி செய்தலே உங்கள் தொழில். அப்படிச் செய்திடில் நீங்கள் ஞாநிகளாவீர். ஒரு உபமாநம் சொல்லுவேன். ஒரு சிற்பியின் சாலைக்குப் போய்ப் பார்ப்போம். சாதாரணகல்வெட்டுக்காரனுடைய சாலையின்மாதிரி யில்லாமல் கற்களின் உருவங்களை அழகாய் உயிருள்ளவைபோல் அமைக்கும் திறமையுள்ள புத்திமானை சிற்பியின் சாலையைப் போய்ப்பார்ப்போம், அவன் செய்யும் வேலைமுறையைக் கவனித்தாராய்வோம். அவன் கல்லை அங்குமிங்கும் உளியால் தகர்த்து உருவம் செய்கிறானென்று மதிக்கின்றீர்கள்? அவ்விதம் அவன் செய்கின்றானில்லை. ஆனால் அவன் லக்ஷியித்த உருவத்தைத் தன் முன்னுள்ள கல்லில் சங்கற்பித்து நிறுத்தி

அச்சங்கற்ப ரூபத்தை வெளிக்காட்டாமல் மறைத்திருக்கின்ற உபயோகமில்லாததான தடையான கல்லை அங்குமிங்கும் உளியால் சிதைத்து லக்ஷியித்த உருவத்தின் அழகை வெளிப்படுத்துவான். அதுதான் விவேகியான, கற்பனைசக்தி பூர்ணம் பெற்ற சித்திரிப் போனது முறை நம்முடைய ஸ்தூலமான ஊனக்கண்ணால் கரடுமுரடான கல்லைப் பார்ப்போம். அவனோ அக்கல்லின்கண் அந்தர்கதமாய், சிறையில் அடைக்கப்பட்ட கைதியைப்போல்மறைந்து நிற்கும் பூர்ண உருவத்தைக் காண்பான். ஒவ்வொரு கொட்டான் அடிப்பினாலும், சிற்றுளியின் திட்பமான ஸ்பரிசத்தாலும், அவன் வேலை செய்துகொண்டுவர, கைதியாயிருந்த உருவம் சிறுகச் சிறுகச் சுதந்தரம்பெற்று முன் லக்ஷியித்த வடிவமாக அவன்முன் வியக்தப்படும். அவ்விதமே நீங்களும் நானும் இருக்கிறோமென்று மதியுங்கள். உலகமென்ற சிற்ப சாலையில் நாமெல்லோரும் கரடுமுரடான பணி செய்யாத கற்கள்போல் இருக்கின்றோம். கற்களுக்குள் சிற்பிசங்கற்பித்த வடிவம் அமைந்திருத்தல்போல, நம்முள்ளத்தில் இறைவன் கரந்துளன். நீவிரும் நானும் சிற்பசாஸ்திரிகளாவோம். நம்முடைய உயிர்வாழ்வின்நேர்மையால் நம்உள்ளத்தில்மறைந்திருக்கும் வடிவம் வெளிப்படவேண்டும். நம்மிடம்சிறைக்கைதிபோன்று அடங்கியிருக்கும்ஈசுவராம்சம்அழகுசுதந்தரம்பெற்று வெளிவரல்வேண்டும். சங்கற்பமென்ற கொட்டானாலும், சிந்தனையென்ற உளியாலும், அநாவசியமாக விருந்துகொண்டு நம்முள்ளத்தி லுறைந்துள்ள ஈசுவராம்சத்தை மறைத்துக்கொண்டிருக்கும் உபயோகமில்லாத கரடுமுரடான கற்களான ஆசாபாசங்களைவெட்டிபெறிந்து, அவ்வுருவத்தின் காம்பீர்யத்தைவெளிப்படுத்துவோம். உண்மையில் நாம்ஒவ்வொருவரும் அச்சிற்பிபோன்றவராம். எவ்வளவுக்கெவ்வளவுத்வரிதமாகவும், சிரத்தையுடனும் அறிவுடனும், திடமான விசுவாசத்துடனும், உங்களுடைய கொட்டானையும், உளியையும் சாதுர்யமாக உபயோகிப்பீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு த்வரிதமாய்க் கைதிவிடுபடும்காலம், ஈசுவரவடிவம் வெளிவருங்காலம், இறைவனாக அமையுங்காலம், வருவதாகும். அதனால் நீங்கள் எங்கேயிருந்தாலும், இப்பெரிய உலகத்தின் வேலைச்சாலையில் எத்தொழிலைப்பற்றியவராய் நடைபெற்றாலும், நீங்கள் சாக்ஷாத்கரிக்கப்பிரியமுடன் விரும்பும் உயர்தர லக்ஷி

யத்தை உங்கள் ஹிருதயத்தின்கண் இருத்துவீர்களாக. உங்கள் ஒவ்வொருவரிடமும் அடைபட்ட கைதிபோலிருக்கும் பரமபுருஷன் ஸந்நிதியை யுணர்வீராக. அக்கைதியை விடுவிக்கும் சுதந்தரம் உங்களுடையதென்றறிக. அக்கைதி விடுதலையானபேற்றைப் பெறும்படியாகச் செய்தல் உங்களாலேயே முடியுமென்று அறியுங்கள். அந்நோக்காய் அவரவர்கள் ஆயுதங்களை எடுங்கள். உபயோகமில்லாமலிருக்கின்ற கல்லைச் சேதியுங்கள், உடைத்து எறியுங்கள், கம்பீரமான வடிவத்தை வியக்தப்படும்படி செய்யுங்கள். அவ்விதம் செய்வீர்களாகில், பாரமார்த்திக நிலையில் நீவிர் கடவுளின் அம்சர்களாக விருக்கின்ற உண்மையை அநுபவஸித்தமாக இவ்வுலக வாழ்விலேயே ஸாக்ஷாத்கரிப்பீர்கள். இஃது உண்மை.

ஓம் தத்ஸத். ஓம்.

ப. நா.

## நன்மொழி.

120. நலஞ்செய்வதில் தீவ்ர அவாவேண்டும். மனிதனுக்கு மாத்திரமன்று. எல்லா ஜீவர்களுக்கும் நலம்பட நற்கர்மம் செய்யக் கண்ணும் கருத்துமாய் இருத்தல் வேண்டும். சிறிய விஷயங்களை அலக்ஷியம் பண்ணாதே. அப்படிப் பண்ணினால், பெரிய விஷயங்கள் சம்பவிக்குங்கால், அவைகளை நழுவவிட்டு மோசம் போவாய். நீ ஈசனுடன் ஐக்யம்பெற முயலுகிறாய். அஃது நீ சுயநலம், பெறுதற்கன்று. ஆனால், ஈசன் அருள் பிரவாகம் உன் மூலமாக உலகத்தாருக்கு ஏற்படவேண்டுமென நினை.

### 121. ஜயம் என்பது என்ன?

(1) பிறர் உன்னை மறந்தாலும், உன்னை அலக்ஷியம் செய்தாலும், அவமதித்தாலும், அவைகளால் சினங்கொள்ளாமல், உள்ளே சந்தோஷித்து, வெளியில் புன்னகை கொள்ளுவாயாகில் அதுவே ஜயம்.

(2) நீ செய்யும் நன்மையைப் பிறர் தீமை யென இகழினும், உன் கர்மங்கள் நிறைவேறாமல் பிறர் இடையூறுகள் விளைவிப்பினும் உன்னிஷ்டத்தைப் பிறர் வருந்தினும், உன் நல்ல உபதேசத்தைப் பிறர் நிந்திப்பினும் இவற்றை எல்லாம் சகித்து, பிரியமாய் சாந்தம் பெறுவாயாகில் அதுவே ஜயம்.

## அயநம்.

# Half-year.

'அயநம்' என்பது அரை வருஷம் அல்லது ஆறுமாத காலம். ஒவ்வொரு வருஷமும் 'உத்தராயணம்' என்றும் 'தக்ஷிணாயநம்' என்றும் இரண்டு அயநங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

உத்தராயணம் என்பது சூரியன் * 'தக்ஷிணவீதி' (Tropic of Capricoru) யினின்றும் திரும்பி உத்தராபிமுகமாய்ச் சென்று, உத்தரவீதி (Tropic of Cancer) வரும் வரை செல்லும் ஆறுமாத காலமாகும். இது அநுஷ்டாநத்தில், தைமாதம் முதல் தேதி முதல் ஆனிமாதம் கடைசிவரை யுள்ள காலமாய் வழங்கப்பட்டு வருகின்றது.

'தக்ஷிணாயநம்' என்பது சூரியன் மேற்கூறிய 'உத்தரவீதி' யினின்றும் மறுபடி தெற்கே திரும்பி தக்ஷிணவீதி வந்து சேரும் வரை செல்லக்கூடிய ஆறுமாதகாலமாகும். இது ஆடிமாதம் முதல் தேதி முதல் மார்கழிமாதம் கடைசிவரையுள்ள காலமாக அநுஷ்டாநத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு உத்தராயண மத்யதிநத்தில் (Central day) ஒரு திநமும், தக்ஷிணாயந மத்ய திநத்தில், ஒரு திநமும் ஆக வருஷத்தில் இரண்டுதிநங்களில் மாத்திரம் சூரியன் பூமத்ய ரேகைக்கு நேர் உச்சியில் பிரகாசிக்கின்றான். இவைகள் முறையே 'வஸந்தவிஷுவ' என்றும், 'சரத்விஷுவ' என்றும் சொல்லப்படும். † வருஷத்தில் இவ்விரண்டு திநங்களில் மாத்திரம்தான் இரவும் பகலும் ஸமகாலமாயிருக்கும்.

ஒவ்வொரு அயநமும் ஆரம்பிக்கும் திநத்துக்கு அயநாதி (அயந ஆரம்பம்—Solstice) என்று பெயர். உத்தராயண ஆரம்ப திநம் உத்தராயணாதி (Winter solstice) என்றும், தக்ஷிணாயந

---

* தக்ஷிணவீதி—மகரவீதி—Tropic of Capricorn. பூமத்ய ரேகைக்குத் தெற்கே 23½யாம் அம்சம். உத்தரவீதி—கடகவீதி—Tropic of Cancer. பூமத்ய ரேகைக்கு வடக்கே 23½ யாம் அம்சம்.

† வஸந்தவிஷுவ—சைத்ரவிஷுவ—Vernal Equinox.
சரத்விஷுவ—துலாவிஷுவ—Autumnal Epuinox.

ஆரம்ப தினமானது தக்ஷிணாயநாதி (Summer solstice) என்றும் சொல்லப்படும்.

அநுஷ்டானத்தில் 'உத்தராயண ஆதி' தைமாதம் முதல் தினத்திலும், 'வஸந்தவிஷு'* சித்திரை மாதம் முதல் தினத்திலும், 'தக்ஷிணாயன ஆதி' ஆடிமாதம் முதல் தினத்திலும், 'சரத்விஷு' ஐப்பசி மாதம் முதல் தினத்திலும் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய நான்கு தினங்களும் முறையே மூன்று மாதங்களுக்கு ஒருதடவை ஏற்படுகின்றன.

ஆனால் ஜ்யோதிஷ சாஸ்திர விதிப்படி, விஷுக்களும் அயந ஆரம்பங்களும், 72 வருஷங்களுக்கு ஒருதினம் விதம் முறையே பின்னிடைகின்றன.

இந்த விதியால் இப்பொழுது மேற்கூறிய நான்கு தினங்களும் முறையே 22 தினங்களுக்கு முன்னதாகவே ஏற்படுகின்றன.

பூமத்ய ரேகைக்கு உத்தர பாரிசத்தில் வஸிக்கும் நாம் சம்பந்தப்பட்டமட்டில், வஸந்த விஷு தினத்தில் இரவும் பகலும் சமமாயும், அதுமுதல் வரவரப் பகல் அதிகரித்து தக்ஷிணாயந ஆரம்ப தினத்தில் அதிகப் பகலும் குறைந்த இரவும் (Longest day and shortest night), மறுபடி பகல் வரவரக் குறைந்து சரத்விஷு தினத்தில் மறுபடி பகலும் இரவும் சமகாலமாகவும், அதுமுதல், இரவு அதிகரித்து, தக்ஷிணாயந ஆரம்பதினத்தில் அதிகஇரவும் குறைந்த பகலாகவும் (Longest night and shortest day), அதுமுதல், இரவு வரவரக் குறைந்து மறுபடி வஸந்தவிஷு தினத்தில் இரவும் பகலும் சமமாகவும், இவ்வாறு சக்கராகாரமாய் இரவு பகல்களின் அளவுகள் மாறிமாறி வருகின்றன.

மேற்கூறிய விஷயங்களை அடியிற்கண்ட அட்டவணையால்யாவரும் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

---

* பூர்ணசந்திரோதயம் 2-வது தொகுதி 187-வதுபக்கத்தில் 'விஷுதினம்' என்பதைப்பார்க்க.

## Equinox.

| | உத்தராயண ஆரம்பம் (Winter Solstice) | வஸந்தவிஷு (Vernal Equinox) | தக்ஷிணாயந ஆரம்பம் (Summer Solstice) | சரத்விஷு Autumnal Equinox |
|---|---|---|---|---|
| அநுஷ்டாநஆரம்பம். | தைமாதம் முதல் தேதி | சித்திரை முதல் தேதி | ஆடி முதல் தேதி | ஐப்பசி முதல் தேதி. |
| ஜ்யோதிஷ கணநப்படி தற்காலஆரம்பம் சுமார். | மார்கழி மீ 9-ம் உ | பங்குனி மீ 9-ம் உ | ஆனி மீ 9-ம் உ | புரட்டாசி மீ 9உ. |
| சூரியன் நிலை. | தக்ஷிணவீதி Tropic of Capricorn | பூமத்யரேகை (Equator) | உத்தரவீதி (Tropic of Cancer) | பூமத்யரேகை. (Equator) |
| இரவு பகல் அளவு. | அதிக இரவும் குறைந்த பகலும் (Longest night and shortest day) | சமம் பகல் 30 நாழிகை இரவு 30 நாழிகை | அதிகப்பகலும் குறைந்த இரவும் (Longest day and shortest night) | ஸமம் பகல் 30 நாழிகை இரவு 30 நாழிகை |

இன்னும்வரும்.

R. S. நாராயணசாமி ஐயர்.

419

## புத்தகவரவு.

**கோமதி கோகிலமானது**:—இது பசுமலை அமெரிக்கன் உயர்தர கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகிய, ஸ்ரீமான். கெ. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்கள் இயற்றிய நாவல் என்று சொல்லப்படும் கட்டுக்கதை. இது எளிய தமிழ் நடையில் அழகாய் எழுதியுள்ளது. கற்பனையும் இக்காலத்திய விஷயங்களுக்கு ஒத்ததாக இருக்கிறது. தமயந்திக்கு இரண்டாம் ஸ்வயம்வரம் ஏற்பட்டால் போல கோமதி என்பவள் தன முதல் புருஷனையே இரண்டாம் முறை விவாகம் செய்துகொண்டாள். இதின்கண் முகவுரையில் சொல்லிய படி, பெண்கல்வியின் அவசியம், பால்ய விதவாவிவாகம், பரோபகாரச் சிறப்பு, தீமைசெய்தார்க்கு நன்மை செய்யவேண்டுமென்னும் சால்பு, கற்பின் மேன்மை, நட்பின் தன்மை, முன்வினைப்பயன் முதலியன அங்கங்கே சந்தர்ப்பத்துக்கேற்ப இதில் நன்கு விவரித்துக் கூறப்பட்டுள்ளன. இது ஒரு நலம் தரும் நாவல் என மதிக்கலாம். இதன் விலை அணா 10. விவேகபாநு அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

பத்திராதிபர்.

## சமாசாரம்.

---

அடையார் 'தியாஸபிஸ்டு' ஆபீஸ் மானேஜர் ஸ்ரீமாந் வாடியா அவர்கள்சென்ற மீ 25உ முதல் 28உ வரை மதுரையில் வந்திருந்தார்கள். அவர்கள் இவ்விடத்தில் தங்கிய காலத்தில் பிரஹ்மஞான சபையின் அந்தரங்க வகுப்பினர்களுக்கு மூன்று உபந்யாசங்களும், சபையின் பொது ஜநங்களுக்கு இரண்டு உபந்நியாஸங்களும் செய்தனர். பிந்திய விரண்டினுள் ஒன்று ஜகத்குருவின் அவதாரத்தைப் பற்றியது பிரஹ்மஞான மந்திரத்திலும், மற்றொன்று பிரஹ்மஞான தர்சநத்தைப் பற்றியதானது பிஷர் (Fischer) துரையவர்களின் பங்களாவிலும் நிகழ்ந்தன. அநேக புத்திமான்கள் கூடினார்கள்.

இரண்டாம் உபந்யாஸத்தின் சுருக்கம் அடியில் வருமாறு:—

1. தற்காலத்தில் உலகெங்கும் பிரவித்தியடைந்துவரும் பிரஹ்மஞான சபையின் கருத்துக்கள் யாவும் புராதநமாகிய பிரஹ்மவித்தையே தவிரவேறல்ல. இதன் முதற்கொள்கையாவது சைதந்யம் ஒன்றேயென்பது. ஸர்வ பிரபஞ்சத்தினுள்ளும் தங்கும் சராசர வஸ்துக்களில் விளங்கும் ஆன்மா ஒன்றேயாம். பிரிக்கப்பட்டவைபோன்ற ஜீவர்களாகிய நாமனைவரும் இந்த ஏகவஸ்துவின் அம்சங்களே. இது ஹிந்துக்களுக்கு நூதனமான விஷயமன்றே. உபநிஷத்துக்களின் ஸாரம் இதுவே. இதை நாம் உணர்வோமாயின் நம்முள் சகோதர பாவம் நிலைபெறும். நாமியாவ

420

ரும் ஆரம்பத்திலும் முடிவிலும் ஒரேவஸ்துவாகிய பிரஹ்மத்தைச்சேர்ந்தவர்களாதலின் நாம் தற்காலத்திலும் ஒருவருக்கொருவர் அன்பு நிலை பெறவேண்டுவதே உசிதமென்பது நியாயமாகும்.

2. இரண்டாம் கொள்கையாவது:— பரமாத்மாவின் அம்சர்களாகிய ஜீவர்கள் தம்முள்ளும் வெளியிலும் எங்கும் நிறைந்த அப் பரவஸ்துவை முடிவில் அடைதல் கூடும். அதற்கு மார்க்கமாவது: ஜகத்பரிபாகம், அசாவது விகாஸ முறைவழியே பல கல்பங்கள், ஊழி காலங்களாய்ப் பல ஜன்மங்களெடுத்து, இவ்வுலகங்களின் கண் அடையவேண்டிய ஸகல அநுபவங்களையும் கிரஹித்து, முதிர்ச்சியடைதலேயாம். அந்தப் பரிபாகம் இருவகைத்து. மேற்றிசையார் ஸ்தூலப் பிரகிருதியின் மாற்றங்களைமட்டும் கிரஹிப்பாராகி, பரிபாகம் ஒரேவழி செல்லுகின்றதென்பார். பிரஹ்மஞான தர்சகத்திலோ முழு உண்மையும் கிரஹித்து வியவஹரிப்பதால் பஹிரங்கமான உபாதிகள் அல்லது கோசங்களின் அபிவிருத்தியையும், அந்தரங்கமான சேதநத்தின் முதிர்ச்சியையும்பற்றிப் பிரஸ்தாபம் இருக்கின்றது. இக்கொள்கையும் நூதநமானதன்று. ஒவ்வொரு மதத்திலும் இவற்றின் பிரஸ்தாபம் உண்டு.

இனி, புதிது புதிதாய் ஜீவன் எடுத்துக்கொள்ளும் ஜன்மங்களும், அவற்றின்கண் அவனுக்கு நிகழும் ஸகல ஸம்பவங்களும், யாதொரு ஒழுங்குமின்றி ஏற்படுபவைகளல்ல. "காரணத்தைப்பற்றியே காரியமாகிய பலன் ஏற்படும்," என்னும் இயற்கையான நியதியால் அவை யாவும் ஸம்பவிக்கின்றன. "தினை விதைத்தால் தினையே விளையும்" என்னும் பழமொழியும், அப்படியே உலகிலுள்ள வெவ்வேறு மதகிரந்தங்களில் காணப்படும் பிரமாண வசநங்களும் இவ்வுண்மையையே விளக்குகின்றன.

(3) ஆதலின் ஜீவனது பரிபாகமும் முதிர்ச்சியும் அவனது வசத்திலேயேயிருக்கின்றதன்றி, அவனுக்குப் புறம்பான எவ்வித நிர்பந்தங்களாலும் ஏற்படுவதன்று. ஜீவன் உலகங்களில் அநுபவங்களை ஸம்பாதிக்கும் பொருட்டு, பற்பல ஜன்மங்களையும், பிரதி ஜன்மத்திலும் ஸ்தூல ஸூக்ஷ்ம பூமிகளில் தன் வியவஹாரங்களின் பொருட்டுப் பற்பல சரீரங்களையும் கிரஹித்துக் காலங்கழிக்கிறான். இவற்றில் அநுபவங்களை முழுமையும் கிரஹித்துத் தன்மயப்படுத்திக்கொண்ட பின்னரே இவனுக்கு விமோசநமுண்டு. ஆதலால், காரணங்களுக்கு ஒத்த பலன்களை யறியாமல் வீணே துக்கங்களைப் பெருக்கிக்கொள்ளுகிறான். சரீரங்களை அடக்கியாளாமல் அவைகளில் ஏற்படும் தாத்காலிகமான சுகாதிகளைத் தன்னுடையதென மதித்து ஜீவன் மோசம்போகிறான். அவைகளைத் தனது வாஹநங்கள் அல்லது

கருவிகளெனத் தேர்ந்து, தனது ஸ்வஸ்தானமானது இம்மூவுலகிற்கும் அப்பாலுள்ள பரமார்த்த பதவியென அறிந்து, அதற்கேற்ப இத்தாழ்ந்த கோசங்களை அடக்கி நடாத்தி வியவஹாரம் புரிதலே ஜீவனுக்கு உசிதமான வழியன்றோ? இவ்வுண்மையைக் குறிப்பிடவன்றோ மகாதேவமூர்த்தி ஆசாபாசங்களாகும் பிணங்களை யெரிக்கும் சுடுகாட்டில் வாஸஞ் செய்கிறாரென்று ஹிந்துமத கிரந்தங்கள் கூறுகின்றன. இவற்றை எனது ஹிந்து நண்பர்கள் அவர்கள் அநுஷ்டானத்தில் கவனித்தவர்களாகத் தோன்றவில்லை. இந்த உண்மையைக் காட்டவன்றோ, பரமசிவன் புலித்தோலாடை தரித்தாரென்று ஹிந்துமதப் புஸ்தகங்களில் எழுதப்பட்டிருக்கின்றது. இந்த ரஹஸ்யத்தை உணர்ந்தவன் இந்திரியங்கள் முதலியவைகளின் தூண்டுதல்களையும் அடக்கி நிற்பன். இதைவிட்டு வெளிவேஷமாய்ப் பல மானிடர் இத்தேசத்தில் புலித்தோலாஸநம் தாங்கிச்சஞ்சரிக்கின்றனர். அந்தோ! தற்காலத்தில் 'ஸ்வராஜ்யம்', 'ஸ்வதேசீ' எனப் பலர் தேசாபிமானிகள் என்ற பெயர் பூண்டு ஓலமிடுகின்றனர். பரமார்த்தத்தில் ஜீவர்களின் ஸ்வஸ்தானமாகிய துரியவலகின் வாழ்க்கையை அபிமானித்து அதை வற்புறுத்திக் கூறுதலே ஸ்வதேசி என்ற வார்த்தையின் உண்மைப் பொருளாகும். அதை உலக வியாபாரத்தால் தடைப்படாமல் காப்பாற்றி விருத்திபண்ணிக் கைப்பற்றிக் கொள்ளு முபாயமே 'ஸ்வராஜ்ய' மாகும். இவ்வித ஸத்தியமான வியவஹாரங்களுடையவரே வாஸ்தவமான தேசாபிமானி. ஏனையோர் போலி அபிமானிகளேயாவர் என்பது துணிபு.

---

**சாத்தூரில் நடந்த பிராஹ்மணர சபைக்கூட்டம்:**—சென்ற பிப்ரவரி மீ 17-18௳ களில், சாத்தூரில், மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களில் உள்ள பிரஹ்மணாகக் கிளைச் சங்கங்களின் மஹாஸபை ஐந்தாவது முறை கூடியது. பென்ஷன் ஸப்ஜட்ஜு மகா-ள-ள-ஸ்ரீ இராமசந்திரராவ் அவர்கள் அச்சமயம் அக்கிராஸநம் வகித்தார்கள். டி மீ 16௳ யிலேயே அநேகர் சாத்தூருக்குப் போனார்கள். அன்றுதினம் சாயங்காலம், மகா-ள-ள-ஸ்ரீ, வி. ராமச்சந்திர ஐயர் அவர்கள் பிராஹ்மணர தர்சநத்தைப்பற்றிப் பொதுவாய்த் தமிழில் உபந்நியாஸம் செய்ததில் அடியில் வருமாறு சில விஷயங்கள் சொன்னார்கள். உலகில் அநேக கார்யங்கள் கூட்டுறவினால் நடத்தப்படுகின்றன. ஜநசமூகத்தில் ஒருவிதமான நேர்மையும், சிநேகமும், சகோதரபாவமும் இருக்கின்றன. அதுவே உலக தர்மம் என்ற உணர்ச்சிமாத்திரம் இல்லை. அது இருக்குமாகில் ஜநசமூகத்தில் இன்னும் அதிகமாக சிநேகபாவம் அதிகரிக்கும். துவேஷமும் போராட்டமும் குன்றும்.

பின்பு அன்று இரவு 8மணிக்குமேல், மகா-ள-ள-ஸ்ரீ,ப. நாராயண ஐயர் அவர்கள் அன்று சிவராத்திரி தினமாகையால், சிவராத்திரியின் உண்மையைப்பற்றி உபந்நியாஸம் செய்ததில் அடியிற்கண்ட சிலவிஷயங்கள் முக்கியமானவை. ஒவ்வொரு வருஷமும் மாசியின் அமாவாஸைக்கு முற்பட்ட சதுர்த்தசி தினத்தின் சிவராத்திரி முக்கியமானது. அது பிரளயத்தின் முடிவைச் சூசிப்பிக்கின்றது, அமாவாசை அன்றுதினம் சங்கற்ப ரூபமான மந்வந்தரத்தைக் குறிப்பிடும். சிருஷ்டிக்குமுன்னர் ஒரே இருட்டாக இருந்தது. வியக்தப்படாத ஸ்திதி இது. எங்கும் பரவியதாய் ஒரு அகண்ட தேஜஸ் தோன்றியது. அதை "பெயர் அறியாத பெருஞ்சுடர்" என்றார் திருமூலர். இதைத்தான் ஹிரண்மய அண்டம் என வேதத்தில்பிரஸ்தாபித்துள்ளது. நக்ஷத்திரங்களாகவும், கிரஹங்களாகவும், வியக்தப்படுமுன், அவைகளின் பிரகிருதி திரவியங்கள் (Nebula) என்று ஆங்கில நூற்களில் சொல்லப்பெறும் பரவிய நெகிழ்ந்த ஆவிரூபமான தேஜோமயஅண்டமாகத் தோன்றின. அந்த ஆவிமயமான அண்டமே ஈசுவர சைதந்நியம் பெற்றுச் சுழன்றுகொண்டிருந்தது. அச்சுழற்சியின் கார்யமாக மோதிரவளையமான ஜோதிர்மயமான ஆவிவட்டங்கள் உண்டாயின. அவ்வட்டங்கள் இறுகி, ஸ்தூலித்து பல கோளங்களாயின. இது மேல் நாட்டுப் புஸ்தகங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த ஜோதிர்மய அண்டமே, சிவராத்திரி தினத்தில் ஜோதிர்லிங்கமாக ஆராதிக்கப்படுகிறது. இதைப் புராணங்களில், பிரஹ்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் நடந்த "நான் பெரியவன், நான் பெரியவன்" என்ற வாதத்தை முடிவுபடுத்தவந்த காட்சி எனச் சொல்லியிருக்கிறது. அடியில் வரும் பாசுரங்கள் இதைத் தெளிவு படுத்துகின்றன.

அலரவனு, மாலவனும் அறியாமே அழல்உருவாய்
நில்முதற்கீழ் அண்டம்உற நின்றதுதான், என், எடீ?
நிலமுதற்கீழ் அண்டம்உற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரந் தவிரார், காண், சாழலோ!

—திருவாசகம்.

பிரமனு மாலும் பிரானேநா னென்னப்
பிரமன்மா றங்கடம் பேதமை யாலே
பரமீ னனலாய்ப் பரந்துமுன்னிற்க
வரனடி தேடி யரற்றுகின் றாரே. —திருமந்திரம்.

மேற்கண்ட பாசுரங்களால் வைஷ்ணவர்கள் கோபம் கொள்ளற்க. பரபிரஹ்மம் என்பது ஒரு அலையற்ற சமுத்திரம். அதில் ஸ்ருஷ்டி என்பது ஒருஅலை. அதில் முப்பான்மையான தொழில்அமையும். ஆக்கல், காத்தல்,

அழித்தல் என்பனவாம். ஒரே ஈசுவர சைதந்யம் அம் முத்தொழிலையும் நடத்தும். ஒரோர் தொழிலைப் புரிகிற ஈசுவர அம்சத்திற்கு அல்லது ஈசுவர அவஸ்தைக்கு ஒரோர் பெயர் அமையும், முறையே பிரஹ்மா, விஷ்ணு, உருத்திரன் என்பவர்களாம். ஒரே ஈசுவரனே முத்தொழிலால் மூன்று பெயர்கள் பெறுகின்றார். இவ்வபிப்பிராயத்தை அடியில்வரும் பாசுரம் தெளிவிக்கும்.

> ஆதிப் பிரானு மணிமணி வண்ணனு
> மாதிக் கமலத் தலர்மிசை யாயனுஞ்
> சோதிக்கின் மூன்றுந் தொடர்ச்சியி லொன்றெனர்
> பேதித் துலகம் பிணங்குகின் றார்களே.
>
> —திருமந்திரம்.

இம்மூன்று தேவர்களின் பர அவஸ்தாநிலையை வேதாந்திகள் பிரஹ்மமென்றும், வைஷ்ணவர்கள் மஹாவிஷ்ணுவென்றும், சைவர்கள் பரமசிவமென்றும் சொல்லுவார்கள். இதுநிற்க,

பஹிர்முகமாய் ஜ்யோதிர்லிங்கத்தை உபாஸனை பண்ணுதலினின்று அந்தர்முகப்பட்டு, இந்திரிய நிக்கிரஹங்கள்செய்து, சித்த விர்த்திகள் ஒய " ஜ்யோதிஷாம் ஜ்யோதிః " என்ற பரஞ்ஜோதிஸை ஸாக்ஷாத்கரித்துப், பின்பு உபாஸகனே ஈசுவரனாதல் என்பதாம்.

## சென்றமீ 17-ம்உ சனிக்கிழமை நடந்த விஷய கிரமங்கள்.

மறுநாள் 17உ காலையில் 9மணிக்கு பிரஹ்மஞாந சபையின் அந்தரங்க வகுப்பினர்கள் கூடினார்கள். பின்பு பத்து 10மணிக்குப் பிரஹ்மஞாந சபையைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்கு பிரஹ்மஸ்ரீ இராமச்சந்திரராயரவர்கள் சபையின் நோக்கங்களைப்பற்றியும் அங்கத்தினர்களின் உத்தரவாதங்களைப் பற்றியும் பிரஹ்மஞாந ஸபைக்கு என்று எல்லாரையும் கட்டுப்படுத்தக்கூடிய ஸகோதர தர்மம் என்ற ஸித்தாந்தத்தைத் தவிர மற்றைய நிர்ப்பந்தமான எவ்வித ஸித்தாந்தங்களும் இல்லையென்றும் வற்புறுத்திக் கூறினார்கள். ஸமீபத்தில் லோக குருவாக ஒரு மஹாபுருஷர் அவதாரமாவாரென்றும், அவரை ஜநங்கள் அங்கீகரித்து சிரேயஸ்ஸைப் பெறுதலுக்கு மநத்தூய்மை பெற ஆயத்தமாகவேண்டுமென்றும், இன்னும் இவைபோன்ற சில விஷயங்களைப்பற்றியும் விவரமாய் உரையாடினார்கள்.

பகல் 3மணிக்கு பஹிரங்கமான பொதுச்சபை கூடியது. பிரஹ்மஞாந அங்கத்தினர்கள் 40 பேர்களும், பொது ஜநங்கள் 60 பேர்களும் அச்சபையிலிருந்தார்கள், சபையைச் சேர்ந்த அங்கத்தினர் அநுவர் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி

ஸ்தோத்திரத்தை கானம் பண்ணினார்கள். அச்சமயம் சபையாரெல்லோரும் பக்தி சிரத்தையுடன் அந்தர்முக பாவனையாகக் கண்மூடித் தியானித்தார்கள். பின்பு, சாத்தூர் சபையின் பிரெஸிடெண்டாகிய எஸ். சுப்பிரமணிய நயினாரவர்கள் அங்கத்தினர்களையும் அக்கிராஸநாதிபதி அவர்களையும் உபசரித்து, அவர்களின்நல்வரவைப்பிரியத்துடன் ஆதரித்துச்சிலவார்த்தைகளை வசனித்தார்கள். பின்பு அக்கிராஸநாதிபதியாகிய இராமச்சந்திரராயரவர்கள் பிரஸ்மஞான சபையால் பொதுவகையாக உலகத்திற்கும் சிறப்புவகையாக நம்மிந்தியா தேசத்திற்கும் உண்டாயிருக்கும் நலத்தைப் பற்றி விஸ்தாரமாய் உபந்நியஸித்தார்கள். ஸ்ரீமாந்- ஆல்காட் துரையவர்களும் மாதுஸ்ரீ பிளவாட்ஸ்கி அம்மையாரும் உலகத்தில் வெளிநின்று இச்சபையை ஸ்தாபித்தார்களென்றும், அவர்கள் இந்தியாவுக்கு வருமுன் நாஸ்திக மதம் எங்கே பார்த்தாலும் பரவியிருந்ததென்றும், ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களும், ஆங்கிலம் படித்த உத்தியோகஸ்தர்களும் நாஸ்திகவாதத்தில் பிரியமுள்ளவர்களாய் "நாத்திகம்பேசி, நாத்தழும் பேறினர்" என்றும், ஆஸ்திகர்களான மற்றவர்கள் உண்மைகளை அறிந்து சரிவரச்செய்யாமல் குருட்டுத்தனமாக விரதாதிகள்,சிராத்தாதிகள் முதலிய கர்மங்களைச் செய்து வந்தார்களென்றும், அத்தகையர் சபையைச் சேர்ந்து, சபையால் வெளிவந்துள்ள புஸ்தகங்களையும், சபையின் தலைவர் உபந்நியாஸங்களையும், படித்தும், கேட்டும், தெளிந்து, சிரௌத ஸ்மார்த்த கர்மங்களின் தத்துவங்களை அறிந்திருக்கிறார்களென்றும், பினனும் சில விவரமாய் ஆங்கிலத்தில் உபந்நியாஸம் செய்தார். மற்றைய உபந்நியாஸங்களெல்லாம் தமிழில் நிகழ்ந்தன. பெரியகுளம் ஸ்ரீமாந்- ஸுந்தர ராஜ ஐயரவர்கள் ஸ்வர்க்க நரக அநுபவங்களைப்பற்றிச் செய்த உபந்நியாஸத்தில் நரக வாதனைகள் அளவுக்கு மிஞ்சி வர்ணிக்கப்பட்டிருக்கின்றன வென்றும், கொதிக்கிற எண்ணெயில் ஜநங்களைப் பொரிக்கிறதாகவும், செக்கில் ஆட்டுகிறதாகவும், இவைபோன்றவைகளும், இவைகளைச் சித்திரித்துக் காட்டும் படங்களும் வாஸ்தவமானவைக ளல்லவென்றும், நரகமென்றால் வேறொரு பிரத்தியேகமான ஸ்தாநமல்லவென்றும், இடமாற்றமில்லையென்றும், அவஸ்தாபேதமென்றும், ஸ்தூல சரீரத்துடனிருக்கும் காலத்தில் மநம் இந்திரியங்கள் முதலானவைகளை ஒழுங்காகவும், நேர்மையாகவும், நடத்தாமல் பல காமனைகளை உண்டுபண்ணிக்கொண்டு (குடி, ஸ்திரீ விஷய நுகர்ச்சி, அவைகளால் ஏற்படும் கொலை, களவு முதலியன) இறக்கிறவன் அக்காமனைகளைத் திருப்திசெய்யும் உபாதியாகிய ஸ்தூலசரீரம்இல்லாததால் அக்காமனைகளைத் திருப்திபண்ண இயலாத ஏக்கத்தால் வருந்துகின்றனே யல்லாது வேறல்ல என்றும் பூலோகத்திநின்று புவர்லோகத்தின் ஒரு பாகமாகிய நரகத்திற்குப் போகின்றவர்களை அவ்விடத்தில் பயமில்லாமல்

நடைபெறும் பொருட்டு வழிநடத்த ரிஷிகளும், தேவர்களும், உதவிபுரிகின்றார்கள் என்றும் அக்கிரமஸ்தர்களா யிருக்கின்ற அறிவிலிகளான உலக ஜநங்களை நல்வழிப்படுத்துமாறு எல்லா மத கிரந்தங்களிலும் நரகத்தில் படும் உபத்திரவங்களை ஒன்றுக்குப் பத்தாய் விஸ்தரித்து வர்ணித்திருக்கின்றது என்றும், இம்மையிலும், மறுமையிலும், அவனவன் அநுபவிக்கும் இன்ப துன்பங்கட்குக் காரணம் முறையே ஸத்கர்மங்களும், ஸத் ஸங்கற்பங்களும் தீய கர்மங்களும், தீய ஸங்கற்பங்களுமாம் என்றும், தன்னை நலத்துக்குட்படுத்துவதும், நிலைக்குட்படுத்துவதும் தானே தான் என்றும், ஸ்தூல சரீரத்தைக் கழற்றிப் புவர்லோகத்தில் உண்டுபண்ணப்பெறும்யாதநா சரீரத்துடன்சில அநுபவங்களைஅநுபவித்துப் பின்னர்,கீழான அச்சரீரத்தைக் கழற்றி, காரணசரீரமாகிய விஞ்ஞாந ஆநந்தமய கோசத்துடன் ஸ்வர்க்கலோகத்தையடைந்து,அதில் ஸத் ஸங்கற்பங்களுக்குரிய ஸுகாநுபவங்களையநுபவித்து, ஸத் ஸங்கற்பங்கள் க்ஷீணதசையடையவே பூலோகத்தில் சரீரமெடுக்க ஜீவன் திரும்புகிறான் என்றும், விஸ்தாரமாக உபந்யஸித்தார்.

பின்பு, பிரஹ்மஸ்ரீ, ப. நாராயண ஐயரவர்கள் தேவாலயங்களின் அமைப்பையும், அதில் நடத்தப்படும் ஆராதனைகளின் தத்துவங்களையும் பற்றியும், ஆலயங்களில் ஆராதனை முதலியவை இப்போது சீர்கேடாய் நடைபெறுகின்றன என்பதைப்பற்றியும், அவைகளின் விசாரணைக்குறைவைப்பற்றியும், அவைகளுக்கென்றேற்பட்ட சட்டத்தின் குறையைப் பற்றியும், அவைகள் சீர்திருத்தம் பெறும்படியாகச் சென்னையில்ஸ்தாபிக்கப் பட்டிருக்கிற தர்மரக்ஷண சபையைப்பற்றியும் விஸ்தாரமாக உபந்யாஸம் செய்தார்கள். இதைப்பற்றித் துண்டுப் பத்திரிகையும் அச்சியற்றி விநியோகம் செய்யப்பட்டது.

மகா-ா-ா-ஸ்ரீ பரம்பக்குடி A. S. கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் விக்கிரஹ ஆராதனையைப்பற்றி ஒரு உபந்யாஸம் செய்வதாக வாக்களித்திருந்தனர். அவர் வரவில்லை. ஆனால் ஒரு வியாஸமெழுதி யனுப்பினர். அது வாசிக்கப்பட்டதாக மதிக்கப்பெற்றது. அவர் ஸ்தாநத்தில் மகா-ா-ா-ஸ்ரீ L. சுப்பிரமணிய ஐயரவர்கள் பிரஹ்மஞாந தர்சநத்தின் பிரயோஜநத்தைப்பற்றித் தெளிவாய் ஒரு வியாஸம் படித்தனர்.

சிவகங்கை மகா-ா-ா-ஸ்ரீ பி. எஸ். ராமஸ்வாமி ஐயரவர்கள் ஞாநதுருக்கள் என்ற விஷயத்தைப்பற்றி ஒரு வியாஸம் எழுதிப்படிப்பதாக ஒப்புக்கொண்டவர் சில அஸௌகர்யத்தால் வரக்கூடவில்லை. வியாஸத்தையும், அனுப்பிலர். அவர் ஸ்தாநத்தில் மகா-ா-ா-ஸ்ரீ ஈச்சங்குடி T.S. லக்ஷ்மிநாரயண ஐயரவர்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானின் பாலலீலைகளின் தத்துவத்

தைப்பற்றி இரண்டு உபந்யாஸங்கள் செய்வதாகச் சொல்லி முதல் உபந்நியாஸத்தை 17-உயிலும் 2-ம் உபந்யாஸத்தை மறுதினத்திலும் செய்தார். இந்த உபந்யாஸம் பூர்ணமாக இப்பத்திரிகையில் பின்பு வெளிவரும்.

அன்றிரவு 8-30 மணிக்கு மகா-ா-ா-ஸ்ரீ மதுரை ப. நாராயண ஐயரவர்கள் ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களைப்பற்றிய புகைப்படக்காட்சியும், வானசாஸ்திர ஸம்பந்தமான படங்களின் காட்சியும் மாஜிக் லாண்டேரன் மூலமாய்க் காட்டினர்.

## 18-ம்தேதி ஞாயிற்றுக்கிழமை நடந்த விஷயக்கிரமங்கள்.

காலையில் அந்தரங்கசபை ஸம்பந்தமான கூட்டம் கூடியது. பின்னர் எனக்குடி மகா-ா-ா-ஸ்ரீ வி. ராமச்சந்திர நாயக்கரவர்கள் லோககுருவின் அவதாரத்தைப்பற்றிச் செய்த உபந்யாசத்தில் முன்னர் பல சமயங்களில் லோககுரு அவதாரமாகிப் பற்பல மதங்களில் அந்தந்த தேசங்களிலுள்ள ஜனங்களின் மனப்பக்குவத்திற்குத் தக்கவாறு பல மதங்களை ஸ்தாபித்திருக்கின்றாரென்றும், இனி சமீபத்தில் வரப்போகின்றவர் ஸர்வமத ஐகமத்ய ஸாரங்களைத் தெளிவாகக்காட்டி, மதங்களுக்குள் துவேஷமற்று ஸஹோதரதர்மம் நிகழவேண்டுமென்று வற்புறுத்தி உபதேசிப்பாரென்றும், அவர் வருங்கால் அவர் வரவைச் சரியானபடி அங்கீகரிக்கவேண்டுவதற்கு ஜனங்கள் ஆயத்தமாகவேண்டுமென்றும், பின்னும் சில விவரங்களுடனும் உபந்யசித்தார்.

பிரஹ்மஞான சபையின்கருத்து. உலககைங்கர்யம் முக்கியமானது என்பதைக்காட்டுவதற்காகவே, சபையைச்சார்ந்த அங்கத்தினரான மகா-ா-ா-ஸ்ரீ கே. ராமஸ்வாமி ஐயரவர்கள் ஐக்யநாணய சங்கங்களின் கருத்துக்களைப்பற்றியும், அச்சங்கங்களைப் பல இடங்களில் ஏற்படுத்துவதால் உண்டாகும் ஜனாநுகூலத்தைப்பற்றியும் உபந்யாஸம் செய்துள்ளார். ஸாயங்காலம் ஸம்பாஷணை நடந்தது. பின்பு டாக்டர் R.C. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் மூளையைப் பற்றியும், அதன்பல பிரிவுகளைப்பற்றியும், அவைகளின் செயல்களைப்பற்றியும் விஸ்தாரமான உபந்யாஸம் செய்தார்கள். சொன்ன விஷயங்களைத் தெளிவாக்கும்படி பலகையில் அவைகளைச் சித்திரித்தும் காட்டினார்கள்.

மகா-ா-ா-ஸ்ரீ எ. ரெங்கஸாமி ஐயரவர்கள் பிரஹ்மஞான சபையைப் பற்றி ஜனங்களுக்குள் நிகழும் சில தப்பிதமான அபிப்பிராயங்களைத் தெரிவித்து, அவை, அறியாமையாலும், விசாரணைக் குறைவாலும் ஏற்பட்டிருக்கின்றன என்றும் பின்னும் சில விவரங்களையும் நன்கு உபந்யஸித்தார்கள்.

பின்பு, அக்கிராஸநாதிபதி முடிவுரையாக சபையார்களை ஆசிர்வதித்துச் சில வார்த்தைகள் சொன்னார்கள். பின்பு ஸபையார்களுக்குத் தாம்பூலம் கொடுக்கப்பட்டது. சாத்தூர் கிளைச்சபையார், வந்த அங்கத்தினரை வெள கர்யமாக உபசரித்து அதிதிதர்மத்தை நன்றாய் நடத்தினார்கள். இவையெல்லாம் டை ஊரிலுள்ள விஷ்ணுகோவிலின் முன் மண்டபத்தில் யாதொரு விக்நமுமின்றி ஈசுவரனருளால் நடைபெற்றது.

---

**காலஞ்சென்ற ப்ரஹ்மஸ்ரீ வரதராஜசர்மா அவர்கள் BA., BL., F. T. S.**

சென்ற பிப்பிரவரி மீ 20உயில் சென்னையில் பிரஹ்மஸ்ரீ வரதராஜசர்மா அவர்கள் நாலுநாள் காயலாகவிருந்து இறந்துபோய்விட்டார்கள். இவர்கள் நெல்லூர் டிஸ்ட்ரிக்ட்டு, காவலியில் டிப்டிகலெக்டராக இருந்தார். நல்ல சீலர், பரோபகாரி, உத்தியோக முறையில் பரிசுத்தர், ஏழைகளுக்கு இரங்கும் இளகிய நெஞ்சத்தினர், நீதிமான். பிரஹ்மஞான தர்சநத்திலும், பிரஹ்மஞாநசபையிலும் ஆழ்ந்தபக்தியுள்ளவர். மரணகாலத்தில் இவர்களுக்கு வயது 45 தான். பாலகுடும்பம், 3 புத்திரர்களும், 5புத்திரிகளும். இவர்கள் சந்ததிகளுக்கும் இவர்களின் தாயாருக்கும் ஈசுவரன் ஆறுதலையும் மனோதைரியத்தையும் அளிக்கவேண்டுமென நமது பிரார்த்தனை.

---

**கும்பகோணம் ப்ரஹ்மவித்யா மடாலயம்:**—கும்பகோணத்தில் நூதநமாக அதன்கண்ணுள்ள பிரஹ்மஞாந கிளைச்சபையின் ஆலயம் ஒன்று சென்றவருஷம் ரூ 6500 வரை செலவு செய்து அநேகர் நன்முயற்சியால் கட்டப்பட்டிருக்கிறது. ஊருக்கு சமீபத்தில், ஆனால் ஊரின் அசௌகரியங்களில்லாத ரமணீயமான ஸ்தலத்தில், தாமரைத் தடாகத்தின் அருகாண்மையில் இவ்வாலயம் அமைந்துள்ளது. சென்றவருஷம் பிப்பிரவரி மீ 18உயில் இதன் கிருகப்பிரவேசம் நடந்தது; அச்சமயம் மாதா ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மை வந்திருந்து அவ்வாலயம் என்றும் நலம்பட வாழவேண்டுமென ஆசீர்வதித்தார். இவ்வருஷம் சென்றமீ 18உயில் நடந்த அந்த கிருகப்பிரவேச தினத்தை ஒரு திருநாளாக அச்சபையார்கள் கொண்டாடினார்கள். பலர் உபந்யாசங்கள் செய்தார்கள். ஸ்ரீமான்- நீலகண்டசாஸ்திரியார் சூரியனைப்பற்றிய உபந்யாஸத்தை விஸ்தாரமாகச் செய்தார்.

---

**ஆலப்பிழையில்** வருகிற எப்பிரல்மீ 6-7 உகளில், தமிழ்நாடு, மலையாளநாடுகளிலுள்ள **ப்ரஹ்மஞாநக் கிளைச்சங்கங்களின் பெரியசபைகூடும்.** அநேக அறிஞர்கள் உபந்யாஸம் செய்வார்கள்.

மையில்லாமல், மின்சார சக்தியால் (Electricity) அச்சுப்போடும் இயந்திரம் ஒன்று ஒரு இங்கிலீஷ்காரனால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது சீக்கிரத்தில் அனுஷ்டானத்திற்கு வந்தால் நலமாக இருக்கும்.

---

அன்னிபெஸண்டு அம்மையாரைப்பற்றி ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் அடியில் வருமாறு எழுதியிருக்கிறது: "அம்மையாரின் உள்ளடங்கிய கண்கள், அன்பும் அருளும் உள்ளவைகளாய் ஜ்வலிக்கின்றன. கார்யத்தில் கண்ணுள்ள ஒரு ஸ்திரீயானவள் எவ்விதம் நடைபெறுவாளோ அவ்விதம் அழகாய், விரைவாய் வசிக்கின்றனர். யாதொரு மேட்டிமையும் டாம்பீகமும் கர்வமும் இலர். அவர் ஸத்யஸந்தர். அதனால் முதற்பார்வையிலேயே யாரும் நம்பும்படியான தகைமையர். அவர் சாந்தர். முன்னொருகால் அவர் குணம் சற்று உக்கிரமாக விருந்தது. இப்போது அதை முற்றும் ஜயித்திருக்கின்றார். அவர் கரங்கள் சிறியவை, மிருதுவானவை. அக்கரங்களின் ஸ்பர்சம் மஹம்மலின் ஸ்பர்சம்போன்றது. அவர்பால் அற்புதமான கம்பீரமான சாந்தம் குடிகொண்டிருக்கிறது. அச்சாந்தத்துடன் அற்புதமான சக்தியும் விளங்குகிறது. அவர் தீர்க்கமாகவும் ஸ்பஷ்டமாகவும் வசிக்கின்றனர். விரைவாயும் தெளிவாயும் சிந்திக்கின்றவர் எனத் தெரிகிறது. எண்ணத்தை வெளியிட வசநத் தமொற்றம் இலர். ஓஜஸ், தேஜஸ் உள்ளவராகவும், பிராணகலை நிரம்பியுள்ளவராகவு மிருக்கிறார். அவர் சுலபர். மாநுஷ்ய சுபாவம் நிறைந்தவர்; யாவரும் பிரியப்படும்படியான இயல்பினர். தனிப்பட இருக்கும் இயல்பினர் அல்லர். யாவருடனும் ஸல்லாபம் செய்யும் தன்மையர். ஞானம் அவரிடம் இயல்பால்க் கமழ்கின்றது. அஹம்பாவ முள்ளவர்களின் கர்வமுள்ள வசநம் அவரிடம் இல்லை. வீணரின் பகட்டான மொழியும் அவரிடம் இல்லை. சுருங்கச்சொல்லில் அவர் ஞாநி, நல்லார், மனோபல முள்ளார்; இக்காலத்திய தீரர்கள் சிலரில் இவர் ஒருவரெனத் தெளிக.

---

சர்க்கார், விவசாய இலாகாவில், கிருஷித் தொழிலிற்கு அனுகூலமான விஷயங்கள் அடங்கிய துண்டுப்பத்திரிகைகளை ஜநோபகாரமாகப்பிரசித்தம் செய்து வருகின்றார்கள். சென்ற மாதத்தில் நமக்குக் கிடைத்தவைகளாவன:—(1) கம்போடியா பருத்தியைக் கலவன் இல்லாமல் விதைப்பதின் முக்கிய நோக்கம். (2) பருத்தி சாகுபடி. அதற்கு ஏற்ற கலப்பை. (3) நெல் சாகுபடியில் சில சீர்திருத்த முறைகள். (4) நெற்பயிருக்கு எருவிடுதல். இவைகளை நம்மவர்கள் ரிவினியூ இன்ஸ்பெக்டரிடம் பணச்செலவின்றி இனமாகப் பெற்றுக்கொள்ளலாம். இவைகளை நன்றாய்ப் படித்து இவைகளின்கண் சொல்லப்பட்டிருக்கும் முறைகளை அனுஷ்டித்தால் அதிக லாபகரமாக கிருஷித்தொழில் நடத்தலாம்.

பத்திராதிபர்.

429

# ADVERTISEMENT.

## சுதேச வைத்திய ரத்தினம்.

(இரண்டாம் பதிப்பு.)

முன் பதிப்பைக்காட்டிலும் விரிவானது.

ஆனரபிள் ஸ்ரீ திவான் பகதூர் R. ரகுநாதராவ் C. S. I. அவர்களுடைய நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது. ஐகோர்ட்டு வக்கீல் N. K. ராமஸ்வாமி ஐயர், B. A., B. L. அவர்களின் முகவுரையுடன் எழுதப்பட்டது. இப்புத்தகம் டாக்டர் S. சந்திரசேகரர் அவர்களா லனேக சுகாதார விபரங்களுடனும், இன்னும் பல அருமையான விஷயங்களுடனும் நம் நாட்டிலுண்டாகும் செடி, கொடிகள், காய்கனிகள், கடை மருந்துகள் முதலியவற்றின் குணம், செய்கை, உபயோகம், உபயோகிக்கும் விதம், அவற்றைப் பல நோய்களுக்கும் உபயோகித்துக் குணங்கண்ட ஐரோப்பிய டாக்டர்மார்களின் பெயர்களுடனும், பல நூல்களின் ஆதாரங்களுடனும், ஒவ்வொரு மூலிகைகளுக்கும் தமிழ், இங்கிலீஷ் பெயர்களுடனும் அந்நோய்களுக்கு வைத்தியருதவியின்றி நாமே செய்துகொள்ளக்கூடிய விபரங்களுடனும் சிறுவர்களுக்கு வாசிக்கக்கூடிய செந்தமிழ் நடையில் வரையப்பட்டிருக்கின்றது. வேண்டியவர்கள் உடனே எழுதவும்.

விலை ரூ. 1—0—0 தபால் சார்ஜ் 0—3—0.

வைத்தியபோதினி:—சித்திரப் படங்களோடுகூடிய ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. தபால்சார்ஜ் உள்பட வருஷசந்தா ரூபாய் 1—0—0 தொடுவாய்ப் பகுதிகளுக்கு ஷில்லிங் 3.

மானிட ஜீவிய சிந்தாமணி அல்லது ஆண்மையின் அழிவும் அதனை அகற்றும் விதமும், இப்புத்தகம் அச்சிலிருக்கிறது. விலை ரூபாய் 1. வேண்டியவர்கள் இப்பொழுதே எழுதிக்கொள்ளவும்.

வைத்தியபோதினி ஆபீஸ், கும்பகோணம்.

---

## ஸ்ரீ பரமேஸ்வர திருவுருவப்படம்.

### வர்ணத்துடன் போட்டோக்கிராப்பில்

எடுத்திருப்பதாகிய படம், சைவசமயிகளாகிய பக்தர்கள் ஒவ்வொருவர் வீடுகளிலும் மடம் சத்திரமுதலிய இடங்களிலும் வைத்துப் பூசிப்பதற்குமிகச்சிறந்ததென்பது திண்ணம். இப்படம் வேண்டியவர்கள் அடியிற்கண்டவிலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். தபாற்செலவு வேறு, படத்தின் அளவு 24 × 20, அங்குலம் உள் அளவு 17 × 13, படம் 1-க்கு கிரயம் ரூ. 0—12—0.

சு. சந்திரசேகரம் பிள்ளை,

ஆர்டிஸ்டு & போட்டோகிராப்பர், அருந்தவபுலம், நீர்முளைபோஸ்டு,

திருத்தருப்பூண்டி தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா.

ADVERTISEMENT.

# மறந்துவிடாதீர்கள்.

அநேக பொன் வெள்ளி பதக்கங்களும் நற்சாக்ஷிபத்திரங்களும் பெற்றவர்கள்,

புதிய சரக்குகள் ! —— புதிய மாதிரிகள் ! !

பிடித்தமில்லாத தினுசுகளை வாபஸ் பெற்றுக்கொள்வோம்.

## நாகரிகமான வெண்பட்டு வேஷ்டிகள்.

| முழம் நீளம் | | முழம் அகலம் | | ரூ | அ | முழம் நீளம் | | முழம் அகலம் | | ரூ | அ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | ,, | $2\frac{1}{2}$ | ,, | 6 | 8 | 10 | ,, | 3 | ,, | 13 | 0 |
| 6 | ,, | 3 | ,, | 9 | 0 | 4 | ,, | $1\frac{3}{4}$ | ,, | 4 | 0 |
| 7 | ,, | 3 | ,, | 10 | 0 | 16 | ,, | $2\frac{1}{2}$ | ,, | 22 | 0 |
| 8 | ,, | 3 | ,, | 11 | 0 | | | | | | |

## கம்பளிப் போர்வைகள்.

பனி குளிர் முதலியவைகளுக்கு உபயோகிக்கக்கூடிய நைசான கம்பளி ரோமத்தால் நிசவு செய்த போர்வைகள் உறுதியும், மிருதுவும், நேர்த்தியும், நீடித்து நிலை நிற்கும் சாயமுமுள்ளது. வெள்ளை, மஞ்சள், ரோஸ், பச்சை, சிவப்பு, காக்கி, வாதாமி முதலிய பலகலர்களிலுமுண்டு. 6 முழ நீளம் 3 முழ அகலம் விலை ரூ $4\frac{1}{2}$, 5, 7.

மேகவர்ண போர்வை 6 முழம் நீளம் 3 முழம் அகலம் ஜிர் 1, ரூபா. 7—8.

ஷை ஷை ஷை ,, 2, ரூபா. 6—0.

"காபூல் பால்காயம்" 10 தோலா டப்பி 1க்கு ரூ 1.

## Brasstoys.

இது அருமைக்குழந்தைகளின் மனதை ரமிக்கச்செய்யக்கூடியவிளையாட்டுச் சாமான். இது இந்தியர்களின் வீடுகளில் சமையல்செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளது. இந்த விளையாட்டு செற்று ஒவ்வொன்றிலும் 32 வித சாமான்களடங்கியிருக்கும். பித்தளையினால் செய்யப்பெற்று மிகப் பளபளப்பும் அழகும் வாய்ந்தவை. ஐரோப்பியர்களும் வெகு பிரியத்துடன் ஏராளமாக வாங்குகிறார்கள். இது இந்தியரின் கை வேலை.

☞ இந்த அருமையான விளையாட்டு சாமான் இந்தியாவில் பிரபல பத்திரிகையாகிய "பம்பாய் டைம்ஸ் ஆப் இந்தியா" வால் மிகவும் புகழ்ந்து கொண்டாடப்பெற்றது.

| இதின் விலைகள். | | | |
|---|---|---|---|
| | பெரிய சயிஸ் செற்று 1க்கு ரூ | | 3—8—0. |
| | மத்திம | ஷை | 2—0—0. |
| | சின்ன | ஷை | 1—8—0. |

கேட்லாக் இனாம்.

**கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,**

பட்டு வர்த்தகம், ஸ்ரீகாசி. **Benares City.**